LAM TARUM TITTANGAL

GOVT. OF INDIA

[illegible]

# வளம் தரும் திட்டங்கள்

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்

December 1957 (Pansa 1879)

**75 நயே பைசே**

**Re. 0·75**

WE PLAN FOR PROSPERITY (Tamil)

# வளம் தரும் திட்டங்கள்

**பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்**

செய்தி, ஒலிபரப்பு-மந்திரி இலாகா

இந்திய சர்க்கார்

# பொருள் அடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | திட்டம் எதற்கு ... ... ... | 3 |
| 2. | நமது திட்டங்கள் ... ... ... | 7 |
| 3. | அன்னை பூமி ... ... ... | 10 |
| 4. | விவசாயச் சீர்திருத்தங்கள் ... ... | 23 |
| 5. | ஆறுகளை அடக்குதல் ... ... ... | 28 |
| 6. | மௌனப் புரட்சி ... ... ... | 34 |
| 7. | தொழில் வளர்ப்போம் ... ... ... | 39 |
| 8. | புதையல் பொக்கிஷங்கள் ... ... | 54 |
| 9. | நாட்டின் நரம்புகள் ... ... ... | 57 |
| 10. | திட்டத்தின் உயிர் ... ... ... | 70 |
| 11. | வேலை வசதி ... ... ... | 83 |
| 12. | மாபெரும் அறைகூவல் ... ... ... | 84 |

அத்தியாயம் 1

# திட்டம் எதற்கு?

கடந்த பத்து ஆண்டுகளில் நம் நாட்டில் இரு அதிசயங்கள் நிகழ்ந்துள்ளன. அந்நிய ஆட்சி ஒழிந்து தேசிய அரசாங்கம் தோன்றியது முதலாவது அற்புதம். சிறு குழந்தைகளுக்குக் கூட இது தெரியும்.

நமது தேசியத் திட்டம் ஒன்று பிறந்தது என்பது இரண்டாவது அற்புதம். சுதந்திரம் கிடைத்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இத் திட்டம் வந்தது. அப்போது நீங்கள் வயதில் சிறியவர்களாக இருந்தீர்கள்; அதனால் அந்தத் திட்டத்தை நீங்கள் சரிவரத் தெரிந்திருக்க முடியாது. ஆனால் இப்போது நீங்கள் வளர்ந்து விட்டீர்கள். திட்டத்தின் பொருளையும் திட்டத்துடன் உங்களுக்கு உள்ள சம்பந்தத்தையும் இப்போது உங்களால் அறிந்து கொள்ள முடியும்.

தேசியத் திட்டம் என்றால் என்ன? இதை முதலில் அறிய விரும்புவீர்கள். இதே கேள்வியை வேறு விதத்திலும் கேட்கலாம். அதாவது, திட்டமிடுவது என்றால் என்ன; திட்டம் இடாமல் செயல் புரிவது என்றால் என்ன?

ஒரு உதாரணத்தின் மூலம் இக் கேள்விக்கு விடை காணலாம். உங்கள் தகப்பனார் ஒரு தொழிற்சாலையிலோ, அல்லது ஒரு காரியாலயத்திலோ, அல்லது வயலிலோ வேலை பார்ப்பதாக வைத்துக்கொள்வோம். அவர் தம்முடைய வருமானத்தைக் கொண்டுவந்து உங்கள் தாயாரிடம் கொடுக்கிறார். அந்தப் பணத்தைக் கொண்டு குடும்பத்தை அவள் நிர்வகிக்கிறாள். வாடகைவீட்டில் வசித்தால் வீட்டுச்சொந்தக்காரருக்கு அவள் வாடகை கொடுக்கிறாள். குடும்பத்தினருக்கு வேண்டிய உணவு துணி முதலிய பண்டங்களை வாங்குகிறாள். தனது குடும்பத்தி

னர் ஒரு பெரிய வீட்டில் வசிக்க வேண்டும், உயர்ந்த பதார்த்தங்களை உண்ண வேண்டும், நேர்த்தியான ஆடைகளை அணிய வேண்டும், வீட்டில் ஒரு ரேடியோ இருக்கவேண்டும், ஒரு கார் வேண்டும் என்றெல்லாம் தாயார் விரும்பக்கூடும். ஆனால்



துரதிருஷ்டவசமாக நமது பெற்றோர்களில் பெரும்பாலோர் பரம ஏழைகள். சுகபோகங்களுடன் வாழ்வதற்கு அவர்களிடம் பணம் இல்லை. அதனால் நம் தாயார், இருக்கிற பணத்தை விதரணையுடன் செலவிடவேண்டி யிருக்கிறது. இதற்காக அவள் ஒரு திட்டம் போட்டுக்கொள்கிறாள். வீட்டு வாடகைக்கு இவ்வளவு, உணவுக்கு இவ்வளவு, துணிமணிகளுக்கு இவ்வளவு, புத்தகங்களுக்கு இவ்வளவு என்றெல்லாம் அவள் பணத்தைப் பகிர்ந்து வைக்கிறாள். அதாவது, ஒரு திட்டத்தின்படி குடும்பத்தைத் தாயார் நிர்வகிக்கிறாள்.

இத்தகைய திட்டம் இல்லாவிட்டால் என்ன நடக்கும்? அதாவது, கணக்குப் பார்க்காமலே பணத்தைத் தாயார் செல விட்டால் என்ன ஆகும்? உதாரணமாக வீட்டில் உள்ள எல் லாருக்கும் ஒரே நாளில் புதிய உடைகளை வாங்குவதற்கு அவள் தீர்மானிப்பதாக வைத்துக்கொள்வோம். மாத வருமானத்தில் பெரும் பகுதி இதற்குப் போய்விடும். பிறகு மற்றச் சாமான் களை வாங்குவதற்குப் பணம் இருக்காது. சாப்பாட்டுச் செல வைக் கூடக் குறைக்கவேண்டி யிருக்கும். வயிறு காயும்போது புதுச் சட்டையை அணிவதால் என்ன பலன்?

ஆகவே வீட்டை நிர்வகிக்கும் தாயாருக்குத் திட்டம் அவ சியமாகிறது. அதே போல் நாட்டை நிர்வகிக்கும் அரசாங்கத் திற்கும் திட்டம் தேவைப்படுகிறது. ஒவ்வொரு வருஷத்திலும் தனது வரவு-செலவுகளுக்குச் சர்க்கார் திட்டம் போடுகிறது. இதை 'பட்ஜெட்' அல்லது 'வரவு-செலவுத் திட்டம்' என்று குறிப்பிடுகிறோம். ஆனால் 'தேசியத் திட்டம்' என்பது 'பட் ஜெட்டை' விடவும் விரிவானது. சர்க்காரின் சாதாரண நிர் வாகச் செலவுகள் மாத்திரம் அடங்கியது அல்ல தேசியத் திட் டம். நாட்டையும் மக்களின் வாழ்க்கையையும் வளப்படுத்து வது தேசியத் திட்டத்தின் நோக்கமாகும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் எவ்வளவு நிதியைச் சேகரித்து, நாட்டின் அபிவிருத்திக்காக அதை எவ்வாறு செலவிடலாம் என்று திட் டம் வகுப்பதுதான் தேசியத் திட்டம். இந்தக் காலகட் டத்தை ஐந்து ஆண்டுகள் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதாவது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேசியத் திட்டத் தைத் தயாரிக்கிறோம்.

திட்டம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொண் டோம். அதை நாம் ஏன் முக்கியமானதாகக் கருத வேண்டும் என்ற கேள்வி பின்னர் எழுகிறது. பொருளாதார வளர்ச்சி அடையாத பின்தங்கிய நாடு இந்தியா. பிரிட்டிஷ் ஆட்சி காலத் தில் நமது விவசாயம் விருத்தி செய்யப்படவில்லை. கிராம மக் களின் வாழ்க்கையை வளம்படுத்துவதில் எவரும் கவனம் செலுத்தவில்லை. ஐரோப்பாவில் ஏராளமான தொழிற்சாலை கள் நிர்மாணிக்கப்பட்ட போது இந்தியாவில் தொழில்களே வளர்க்கப்படவில்லை. இதன் விளைவாக நம் நாடு முன்னேற

மல் நின்றுவிட்டது. 1947-ல் நாடு சுதந்திரம் பெற்றபோது நமக்குப் போதிய உணவு இல்லை, போதிய துணி இல்லை போதிய வீடுகளும் இல்லை. மற்றும் பல பொருட்களும் பற்றுக் குறைவாக இருந்தன. அதாவது, நமது வளங்கள் விருத்தி செய்யப்படவில்லை என்று சுருக்கமாகக் கூறலாம்.

வளங்கள் என்பவை யாவை? நம் நாட்டிற்கு இயற்கை வழங்கி யுள்ள செல்வங்களே வளங்கள். நதிகள், வயல்கள்,



நீரோடைகள், வனங்கள், மீன் நிலைகள், நிலக்கரி, கனி எண்ணெய், இரும்பு, கால்நடைகள், மற்ற மிருகங்கள் முதலியவை எல்லாமே இந்தியாவின் வளங்கள்தாம். இவற்றில் மிக முக்கியமான வளம் நாமே—அதாவது 36 கோடி மக்களே.

நமது வளங்கள் முன்பு விருத்தி செய்யப்படவில்லை என்றால் இப்போது விருத்தி செய்வதுதானே என்று நீங்கள் கூறக்கூடும். அதிக உணவை விளைவிக்க வேண்டும். பூமியிலிருந்து நிலக்கரியையும் எண்ணெயையும் தோண்டி யெடுக்க வேண்டும். நதிகளில் அணையைக் கட்டிப் பாசனத்துக்கும் மின்சார உற்பத்திக்கும் வசதி செய்ய வேண்டும். எல்லாருக்கும் வீடு கட்டிக் கொடுக்கவேண்டும். எல்லாவிதப் பண்டங்களையும் தயாரிக்கத் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் இவற்றை யெல்லாம் செய்வதுதானே என்று நீங்கள் கேட்கலாம். உண்மைதான். இவற்றையும இன்னும் பல காரியங்களையும் நிறைவேற்றத்தான் விரும்புகிறோம். ஆனால் ஒரு சங்கடம் இருக்கிறது. எல்லோருக்கும் ஒரே சமயத்தில் புதிய ஆடைகளை வாங்கிக் கொடுக்க விரும்பிய தாயாரின் சங்கடத்

தைப் போன்றது அது. ஆம், பணம் இல்லாமைதான் அந்தச் சங்கடம். செய்ய வேண்டிய காரியங்கள் எவ்வளவோ உள்ளன. ஆனல் அவற்றுக்குப் பணம் எங்கிருந்து வரும்? இந்த நிலைமையில்தான் திட்டமிடும் முறை தேவைப்படுகிறது. எவ்வளவு பணம் கிடைக்கும் என்பதை மதிப்பிடவும், அந்தப் பணத்தை உபயோகித்து நாட்டைக் கூடியவரை அதிகமாக அபிவிருத்தி செய்யவும் திட்டம் நமக்கு உதவுகிறது. அதனல் தான் தேசியத் திட்டத்தை மிக முக்கிய விஷயமாகக் கருதுகிறோம்.

அத்தியாயம் 2

## நமது திட்டங்கள்

**நா**டு சுதந்திரம் பெற்ற பின் தேசியத் திட்டத்தை வகுக்க ஏன் தீர்மானிக்கப் பட்டது என்பதை மேலே பார்த்தோம். அந்தத் திட்டம் எவ்வாறு தயாரிக்கப் பட்டது என்பதை இனிப் பார்க்கலாம். திட்டம் வகுக்கும் வேலையைப் பல அறிஞர்களிடம் இந்திய சர்க்கார் ஒப்படைத்தது. இந்த அறிஞர்கள் சேர்ந்த குழுவிற்குத் 'திட்டக் கமிஷன்' என்று பெயர். 1951-ஆம் வருஷத்தில் நகல் திட்டம் ஒன்றை இந்தக் கமிஷன் தயாரித்தது. எல்லோரும் படித்து அபிப்பிராயம் சொல்வதற்காகப் புத்தக வடிவத்தில் இந்த நகல் திட்டம் பிரசுரிக்கப் பட்டது. மக்களின் கருத்தை அறிந்த பின் திட்டத்தில் உசிதமான மாறுதல்கள் செய்யப் பட்டன. பிறகு திட்டம் இறுதியாக நிர்ணயிக்கப் பட்டது. இவ்வாறு நமது முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் பிறந்தது.

1951 ஏப்ரல் மாதம் முதல் 1956 மார்ச் மாதம் முடிய உள்ள காலகட்டத்தில் முதலாவது திட்டம் நிறைவேற்றப் பட்டது. திட்டவேலைகளுக்காக ரூ. 2,069 கோடி செலவிட முதலில் உத்தேசிக்கப் பட்டிருந்தது. பின்னர் இந்தத் தொகை ரூ. 2,331 கோடியாக உயர்த்தப் பட்டது. 2,331 கோடி

ரூபாய் என்றால் பிரம்மாண்டத் தொகையாகத் தோன்றும். உலகில் யாராலுமே இவ்வளவு பணத்தைச் சம்பாதிக்க முடியாது. ஆயினும் இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய நாட்டைப் பெரிய அளவில் அபிவிருத்தி செய்வதற்கு இந்தப் பணம் போதவே போதாது. அபிவிருத்தி வேலையின் ஆரம்பக் கட்டத்திற்குத்தான் இந்த நிதி போதுமானதாக இருந்தது. முதல் திட்டம் முடிந்தபின் இரண்டாவது திட்டம், அதன்பின் மூன்றாவது திட்டம் என்று மேன்மேலும் திட்டங்களை வகுக்க வேண்டும் என்பது நமது தலைவர்களுக்கு முன்பே தெரியும். இவ்வாறு பல திட்டங்களை நிறைவேற்றினால்தான் அமெரிக்கா, ரஷியா போன்ற நாடுகளுக்கு ஒப்பாக நாம் முன்னேற முடியும்.

முதலாவது திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி விட்டது. இப்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். முதல் திட்டத்தைவிட இது இரு மடங்கு பெரிது. இத் திட்டத்தை நிறைவேற்றச் சுமார் 4,800 கோடி



ரூபாய்* செலவாகும். இந்தத் தொகை முழுவதையும் ஒரு ரூபாய் நோட்டுக்களாக மாற்றிப் பூமத்திய ரேகையை ஒட்டிப் பரப்பினால் பூமியைச் சுற்றி 120 வளையங்கள் போடலாம்! (ஒரு ரூபாய் நோட்டின் நீளம் 4 அங்குலம்; பூமத்திய ரேகையின் நீளம் 24,900 மைல்).

* இயந்திரங்கள், மற்றப் பொருட்களின் விலை ஏற்றம் காரணமாகவும், திட்டத்தில் செய்யப் பட்டுள்ள புதிய மாறுதல்கள் காரணமாகவும் திட்டத்தின் இறுதிச் செலவு சுமார் ரூ. 5,300 கோடியாக உயரக்கூடும்.

இந்த நிதியை உபயோகித்து விவசாயத்தை வளர்ப்போம், அணைகளைக் கட்டுவோம், பெரிய தொழிற்சாலைகளை நிர்மாணிப்போம், போக்குவரத்து சாதனங்களைப் பெருக்குவோம். இவ்வாறு நாட்டின் செல்வத்தை விருத்தி செய்வோம்.

ஆனால் செல்வம் பெருகினால் மாத்திரம் போதாது. நம்முடைய வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு அச் செல்வம் பயன்படவும் வேண்டும். தற்போது நம் நாட்டில் ஒரு சிலர் தான் பெரும் பணக்காரர்கள். கோடானு கோடிப்பேர் ஏழைகளே. திட்டத்தினால் அதிகரிக்கும் செல்வம் பணக்காரர்களிடம் போய்விடாமல் ஏழைகளின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்குப் பயன்பட வேண்டும். திட்டத்தில் இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

'சோஷலிஸப் பாணி சமுதாயத்தை' அமைப்பதே குறிக்கோள் என்று நமது பிரதம மந்திரி கூறியிருக்கிறார். 'சோஷலிஸப் பாணி சமுதாயம்' என்ற சொற்றொடரைக் கண்டு யாரும் பீதி அடைய வேண்டியதில்லை. எல்லாருக்கும் சம உரிமைகளும், முன்னேறுவதற்கான சம வாய்ப்புகளும் இருக்க வேண்டும். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் குறைந்து கொண்டே போகவேண்டும். இதுவே அச் சொற்றொடரின் பொருள். நாட்டின் செல்வத்தை நியாயமான முறையில் விநியோகித்தால் சாதாரண மக்கள் இப்போதை விட நன்றாக வாழ முடியும்.

இவ்விதம், நமது திட்டத்தின் குறிக்கோள்கள் இரண்டு என்று கூறலாம். உற்பத்தியைப் பெருக்குவது ஒரு குறிக்கோள். சாதாரண மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பது இரண்டாவது குறிக்கோள். இந்த நோக்கங்கள் கைகூடுவதற்காகச் செய்யப்பட்டுள்ள காரியங்களை இனிமேல் பார்க்கலாம்.

அத்தியாயம் 3

# அன்னை பூமி

**ம**னிதனுக்கு அத்தியாவசியமானவை எவை? உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு என்ற மூன்றும் இன்றியமையாதவை. இந்த மூன்றிலும் அதிக முக்கியமானது எது? வீடு இல்லாமல் கூட ஒருவன் காலந்தள்ள முடியும். ஆதிகால மனிதர்கள் உடை யில்லாமலே உயிர் வாழ்ந்தனர். ஆனால் உணவு இல்லாமல் யாராலும் ஜீவிக்க முடியாது. ஆகவே மனிதனின் தேவைகளில் எல்லாம் முதன்மையானது உணவு தான்.

அதனால்தான் நாம் திட்டம் வகுக்கத் தொடங்கியபோது உணவு விஷயத்தை முதலில் கவனித்தோம். நாட்டில் எல்லோருக்கும் போதுமான உணவு இருக்கிறதா என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டோம். 'இல்லை' என்ற பதிலே அக் கேள்விக்குக் கிடைத்தது. நமது கோடானுகோடி மக்களுக்கு அற்பசொற்பமான உணவே கிடைத்து வந்தது. அரிசி, கோதுமை போன்ற உணவு தானியங்களின் விலை மிக அதிகமாக இருந்தது. ஜனங்கள் வாரந்தோறும் 'ரேஷன்' (பங்கீட்டுக்) கடைகளுக்கு முன் நிற்க வேண்டியிருந்தது.

உணவு இன்றி ஏழை மக்கள் சாகாதபடி அரசாங்கம் எவ்வாறு காப்பாற்ற முடியும்? அயல் நாடுகளிலிருந்து உணவு வாங்குவதைத் தவிர வேறு வழியே தோன்றவில்லை. இவ்வாறு ஏராளமான தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. விவசாய நாடாகிய இந்தியாவே உணவுக்கு அந்நியர் உதவியை நாடுவது அழகா? தவிர, வெளி நாட்டுத் தானியங்களுக்காக ஏராளமான பணத்தைச் செலவிட வேண்டியிருந்தது. அதனால் மற்ற முக்கியமான காரியங்களுக்குப் பணம் மிஞ்சவில்லை. இக்காரணங்களால், முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நம் நாட்டிலேயே அதிக உணவை உற்பத்தி செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

முதல் திட்டம் ஆரம்பமானதற்கு முன்னால் இந்தியாவில் ஆண்டு தோறும் 540 லட்சம் டன் உணவு தானியங்கள் விளை

விக்கப் பட்டன. இந்த உற்பத்தியை 14 சதவிகிதம் அதிகரிக்க வேண்டும் என்று முதல் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டது. இதற்காகப் பலவித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தரிசாகக் கிடந்த ஏராளமான நிலங்களைப் பண்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சில தரிசு நிலங்களில் கோரைப் புற்கள் ஆழமாக வேர் விட்டிருந்தன. அவற்றை இலகுவில் அப்புறப்படுத்த முடியவில்லை. இந்தக் கோரைகளை ஒழிப்பதற்கு 'டிராக்டர்கள்' என்ற இயந்திரங்களை அரசாங்கம் அனுப்பியது. இவ் வேலையை நடத்துவதற்காக மத்திய 'டிராக்டர் ஸ்தாபனத்தை' இந்திய சர்க்கார் அமைத்தது.



தரிசு நிலங்களில் வேளாண்மை செய்வது உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு வழி. ஏற்கெனவே உள்ள பயிர் நிலங்களின் உற்பத்தி சக்தியை அதிகரிப்பது இன்னொரு வழி. உதாரணமாக, திருந்திய வித்துக்கள் நமது குடியானவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இந்த வித்துக்கள் முன்னைவிட அதிக மகசூலைத் தந்தன. இயற்கை உரங்களும் செயற்கை உரங்களும் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டன. ஒவ்வொரு முறையும் பயிர்கள் வளரும்போது பூமி தனது சாரத்தை இழக்கிறது. அவ்வப்போது உரங்களைப் போட்டால் இழந்த சாரத்தைப் பூமி திரும்பப் பெற்று விடும். அதனுல்தான் உர உபயோகத்தில் சர்க்கார் கவனம் செலுத்துகிறது. 'அமோனியம் சல்பேட்' என்ற இரசாயன உரத்தைத் தயாரிப்பதற்காகச் சிந்திரி என்னும் ஊரில் ஒரு பெரிய தொழிற்சாலையை அரசாங்கம் நிறுவியது.

நேர் வரிசையில் விதைப்பது, இயற்கை உரங்களையும் செயற்கை உரங்களையும் சரியான விகிதத்தில் கலந்து உபயோகிப்பது, பயிர்களுக்குப் பக்குவமாகத் தண்ணீர் பாய்ச்சுவது முதலிய 'சிறந்த விவசாய முறைகள்' நம் குடியானவர்களுக்குப் போதிக்கப் பட்டன. ஒவ்வொரு சமயமும் ஒரே பயிரைச் சாகுபடி செய்தால் பூமி தனது சாரங்களை ஒரே அளவில் இழந்து கொண்டு போகும். வெவ்வேறு பயிர்களை மாற்றி

மாற்றிச் சாகுபடி செய்தால் பூமியின் வளம் இவ்வாறு குறையாமல் சமநிலையில் இருந்து வரும். இந்த விஷயமும் விவசாயிகளுக்குப் போதிக்கப் பட்டது. ஜப்பானில் ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் இந்தியாவை விடச் சுமார் இரு மடங்கு நெல் விளைகிறது. ஜப்பானியரின் சிறந்த விவசாய முறைதான் இதற்குக் காரணம். இந்த ஜப்பானியச் சாகுபடி முறை நம் நாட்டின் பல பகுதிகளில் பரப்பப் பட்டது.

இரும்புக் கலப்பைகள், விதைப்புக் கருவிகள், தாள் அறுப்புக் கருவிகள் முதலிய நவீன சாதனங்கள் நமது விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டன. விளைச்சலை அதிகரிக்க இந்தக் கருவிகள் உதவுகின்றன. விவசாயிகளின் வேலைச் சிரமத்தையும் அவை குறைக்கின்றன. நிலத்தை உழுவதற்கு டிராக்டர்களை உபயோகிப்பதும் தற்போது பரவிவருகிறது.

நீர்ப்பாசன வசதியை அதிகரிப்பது உணவுப் பெருக்கத்துக்கு மற்றொரு வழியாகும். நம்மைப் போலவே பயிர்களுக்கும் தண்ணீர் அவசியம். நீர் இல்லாவிடில் அவை கருகிவிடும்.



கால்வாய்கள், வாய்க்கால்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் ஏரிகள் முதலியவை பயிர்களுக்கு வேண்டிய தண்ணீரைத் தருகின்றன. நம் நாட்டில் வேளாண்மை நடக்கும் நிலத்தில் ஐந்தில் ஒரு பங்குக்கே இத்தகைய பாசன வசதிகள் உள்ளன. மற்ற நிலங்கள் பருவ மழையைத்தான் நம்பியிருக்கின்றன. பருவ மழை பெய்யாவிட்டால் பயிர்கள் தீய்ந்து போகின்றன. ஜனங்கள் பட்டினிகிடக்க நேருகிறது. இத்தகைய நிலங்களுக்கு

நிரந்தரமான பாசன வசதியை அளிப்பது அவசியம். இதற்காகத்தான் நாடெங்கும் கால்வாய்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் முதலியவற்றை அமைத்து வருகிறோம். குறிப்பாக, வறண்ட பிரதேசங்களில் இவை அதிகமாக அமைக்கப் படுகின்றன. குழாய்க் கிணற்றை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அதற்கும் சாதாரணக் கிணற்றுக்கும் இடையே மிகுந்த வித்தியாசம் உண்டு. பூமியில் வெகு ஆழமாக—300 அடிக்கு அதிகமாகக் கூட—துளை போட்டு அதில் எஃகுக் குழாய் இறக்கப் படுகிறது. விசைப் பம்பு மூலம், குழாய் வழியாக, கீழே யுள்ள நீர் மேலே இழுக்கப் படுகிறது. குழாய்க் கிணறு இவ்வாறு வேலை செய்கிறது.

இவை யெல்லாம் 'சிறிய பாசனச் சாதனங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. அணைகள், நீர்த் தேக்கங்கள் முதலியவை 'பெரிய பாசன ஏற்பாடுகள்'. அவை சம்பந்தமாகப் பின்னர் கவனிக்கலாம். முதல் திட்ட காலத்தில் சிறிய பாசன ஏற்பாடுகள் மூலம் ஒரு கோடி ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களுக்குத் தண்ணீர் வசதி அளிக்கப் பட்டது. ஒரு கோடி ஏக்கர் என்றால் எவ்வளவு பெரியது தெரியுமா? கேரள ராஜ்யத்தை விடவும் சற்றுப் பெரிய நிலப்பரப்பு அது!

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்சொன்ன வழிகளில் எல்லாம் முயற்சித்தோம். இதன் காரணமாகவும், பருவ மழை தவறாமல் பெய்ததன் காரணமாகவும் உணவு உற்பத்தி கணிசமாக அதிகரித்தது. முதல் திட்ட காலத்தில் 14 சதவிகிதம் அதிகமாகத் தானியங்களை விளைவிக்க உத்தேசித்திருந்தோம். ஆனால் நடைமுறையில் அந்த இலட்சிய அளவை விடவும் அதிகமாகச் சாதிக்க முடிந்தது. திட்டத்தின் இறுதி ஆண்டில் 630 லட்சம் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்தோம். திட்ட காலத்துக்கு முந்திய விளைச்சலை விட இது 17 சதவிகிதம் அதிகமாகும்.

## பணப் பயிர்கள்

உணவு தானியங்கள் தவிர வேறு பல மகசூல்களையும் விளைவிக்கிறோம். பருத்தி, சணல், கரும்பு, எண்ணெய் வித்துக்கள் முதலியவை இவற்றுக்கு உதாரணங்கள். இந்த மகசூல்

களுக்குப் பணப் பயிர்கள் அல்லது வர்த்தக மகசூல்கள் என்று பெயர். பணப் பயிர்கள் நமக்கு மிகமிக அவசியமானவை. உதாரணமாக, நாம் உடுத்தும் துணியைப் பருத்தியிலிருந்து தயாரிக்கிறோம். கரும்பு இல்லாவிட்டால் சர்க்கரை கிடைக்காது. சர்க்கரை இல்லாவிடில் வாழ்க்கையில் இனிமை இருக்காது! அதே போல்தான் எண்ணெய் வித்துக்களும். சில வகை வித்துக்களைப் பிழிந்து சாப்பாட்டு எண்ணெய்களைத் தயா



ரிக்கிறோம். வேறு பல எண்ணெய்கள் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுகின்றன. உதாரணமாக எண்ணெயிலிருந்து சோப்புத் தயாரிக்கப் படுகிறது. வித்துக்களிலிருந்து பிழியப்படும் எண்ணெய்களுக்குத் 'தாவர எண்ணெய்கள்' என்று

பெயர். பெட்ரோலியம் என்ற மற்றொரு எண்ணெய் பூமியிலிருந்து தோண்டி யெடுக்கப்படுகிறது. அதற்குக் 'கனி எண்ணெய்' என்று பெயர். கனி எண்ணெய் சம்பந்தமாகப் பின்னொரு அத்தியாயத்தில் கவனிக்கலாம்.

பருத்தி, சணல், கரும்பு, எண்ணெய் வித்துக்கள், வேர்க்கடலை, தேயிலை முதலிய பணப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முதல் ஐந்தாண்டுத் திட்டம் வழி செய்தது. நமது முயற்சிகள் காரணமாக, திட்டத்துக்கு முன்பு இருந்ததைவிட 45 சதவிகிதம் அதிகமான பருத்தி 1955-56-ல் விளைவிக்கப் பட்டது. இவ்வாறே சணல் 21 சதவிகிதமும், எண்ணெய் வித்துக்கள் 8 சதவிகிதமும், கரும்பு $3\frac{1}{2}$சதவிகிதமும் அதிகப்படியாக உற்பத்தியாகின.

இவ்விதம் விவசாயத் துறையில் நாம் சிறந்த சாதனைகளைப் புரிந்துள்ளோம். மக்களின் உணவுக் கஷ்டத்தைப் பெரிதும் குறைத்துள்ளோம். தானிய இறக்குமதிக்காகச் செலவாகி வந்த ஏராளமான பணத்தை மிச்சம் பிடித்திருக்கிறோம். பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள் முதலியவற்றின் உற்பத்தி பெருகியதால் தொழிற்சாலைகள் பெரிதும் பயனடைந்தன. ஏனெனில் தொழில்களுக்கு அவசியமான மூலப்பொருள்கள் இவை.

## இன்னும் பெருக வேண்டும்

முதல் திட்டச் சாதனைகளுடன் நாம் திருப்தி யடைந்து ஓய்ந்திருக்க முடியாது. இன்னும் செய்ய வேண்டிய காரியம் எவ்வளவோ இருக்கிறது. இரண்டாவது திட்ட காலத்தில் முன்னை விடவும் கடுமையாகப் பாடுபட வேண்டும் என்று கூடக் கூறலாம். ஏன் தெரியுமா? அதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, வருஷத்துக்கு 40 லட்சம் வீதம் நமது ஜனத்தொகை அதிகரித்து வருகிறது. இரண்டாவது திட்ட கால இறுதியில் அதிகப்படியாக இரண்டு கோடிப் பேருக்கு உணவு அளிக்க வேண்டியிருக்கும். ஜனத்தொகை சதா அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆகவே உணவு உற்பத்தியையும் சதா அதிகரிக்க வேண்டும். இரண்டாவதாக, நமது தொழில்கள் பெருகி வருவதால் பணப் பயிர்களின்

உற்பத்தியும் பெருக வேண்டும். இல்லாவிடில் தொழில்களுக்குப் போதிய மூலப்பொருள்கள் கிடைக்கமாட்டா. மூன்ருவதாக, நமது தொழில்களுக்கு வேண்டிய இயந்திரங்களையும் சில மூலப்பொருள்களையும் வெளி நாடுகளிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. இவற்றை வாங்குவதற்கு அந்நியச் செலாவணி வேண்டும். விவசாயப் பண்டங்களை ஏற்றுமதி செய்வதன் மூலமே அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க முடியும். நமது தேவையை விடவும் அதிகமாக விவசாயப் பண்டங்கள் உற்பத்தியானுல்தான் ஏற்றுமதிக்கு அவை மிஞ்சும்.

தற்போது வருஷத்துக்கு 630 லட்சம் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்கிருேம். இரண்டாவது திட்ட கால இறுதியில் அதிகப்படி ஜனத்தொகைக்கு உணவு அளிக்க வேண்டும் என்ருல் அதிகப்படியாக 50 லட்சம் டன் தானியங்களை விளைவிக்க வேண்டியிருக்கும். இப்போதுகூட சராசரி இந்தியர் போதிய அளவு உணவு அருந்துவதில்லை என்று விஞ்ஞானிகள் கூறுகிருர்கள். ஆகவே நமது போஷாக்கை அதிகரிப்பதற்காக் இன்னும் 50 லட்சம் டன் தானியங்கள் தேவைப்படும். ஆகமொத்தம் அடுத்த ஐந்தாண்டுகளில் அதிகப்படியாக ஒரு கோடி டன் தானியங்களை உற்பத்தி செய்யவேண்டும். இரண்டாவது திட்டத்தில் இவ்வாறு உற்பத்தியை 16 சதவிகிதம் அதிகரிக்க உத்தேசிக்கப் பட்டது. சமீபத்தில் இந்த இலட்சிய அளவு இன்னமும் உயர்த்தப் பட்டுள்ளது. உற்பத்தியை 30 சதவிகிதத்துக்கு மேல் அதிகரிக்க வேண்டும் என்று நம் பிரதம மந்திரி வலியுறுத்தியுள்ளார்.

நமது விவசாயிகள் தீவிர முயற்சி செய்தால்தான் உற்பத்தியை இவ்வாறு பெருக்க முடியும். சர்க்காரும் சாத்தியமான உதவிகளை எல்லாம் செய்யும். உதாரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இரசாயன உரத் தொழிற்சாலைகள் புதிதாக நிறுவப்படும். திருந்திய விதைகளை உற்பத்தி செய்வதற்காக சுமார் 3,000 பண்ணைகள் ஏற்படுத்தப்படும். மத்திய டிராக்டர் ஸ்தாபனமும் ராஜ்ய டிராக்டர் ஸ்தாபனங்களும் ஏராளமான தரிசு நிலங்களைப் பண்படுத்தும். விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் நவீன கருவிகள் வழங்கப்படும். நோய்கள்,

பூச்சிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்படும். குளங்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் முதலிய சிறிய பாசன ஏற்பாடுகள் மூலம் 90 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதி அளிக்கப்படும். (90 லட்சம் ஏக்கர் என்பது ஹாலந்து தேசத்தைவிடவும் பெரிய நிலப் பரப்பு) குழாய்க் கிணறுகள் மாத்திரம் 3,600 நிர்மாணிக்கப்படும்.



இந்த ஏற்பாடுகளின் விளைவாக உணவு உற்பத்தி பெருகும். அதேபோல் பணப் பயிர்களின் உற்பத்தியும் அதிகரிக்கப்படும். பருத்தி 31 சதவிகிதமும், சணல் 25 சதவிகிதமும், கரும்பு 22 சதவிகிதமும், எண்ணெய் வித்துக்கள் 27 சதவிகிதமும் அதிகமாக விளைவிக்கப்படும். தேங்காய், அரக்கு, புகையிலை, மிளகு, தேயிலை முதலியவற்றின் உற்பத்தியும் உயரும். தவிர பழங்கள், காய்கறிகளை அதிகமாகப் பயிரிடுவதில் இரண்

டாவது திட்டம் விசேஷ கவனம் செலுத்துகிறது. நமது போஷாக்கு அதிகரிப்பதற்குக் காய் கனிகள் அவசியம்.

### கால் நடை அபிவிருத்தி

பயிர் செய்வது மாத்திரம்தான் விவசாயியின் வேலையா? இல்லை, வேறு பல காரியங்களையும் அவர் கவனிக்கிறார். கிராமத்தில் மந்தை மந்தையாக ஆடுகளையும் மாடுகளையும் காணலாம். இவற்றை விவசாயி பராமரிக்கிறார். கோழிகளையும் அவர் வளர்க்கிறார். தேனீ வளர்த்தல், நீர் நிலைகளில் மீன் வளர்த்தல் முதலிய காரியங்களிலும் பல கிராமவாசிகள் ஈடுபடுகிறார்கள்.



இந்தியாவில் $15\frac{1}{2}$ கோடிக் கால்நடைகள் உள்ளன. சுமார் இரண்டு ஆட்களுக்கு ஒரு மாடு வீதம் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் நம் கால்நடைகளின் எண்ணிக்கையைப் போலத் தரம் உயர்வாக இல்லை. நமக்கே போதிய உணவு இல்லாதபோது கால்நடைகளின் தீவனத்தைப் பற்றிச் சொல்ல



வேண்டுமா? சரியான தீவனம் இல்லாமல் அவை வற்றல்களாக இருக்கின்றன. நமது மிக உயர்ந்த ஜாதிப் பசுக்கள்கூட

ஐரோப்பியப் பசுக்கள் தரும் பாலில் பாதிதான் தருகின்றன. ஆகவே கால்நடைகளின் தரத்தை உயர்த்துவது அவசியம். முதல் திட்டத்தில் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 600-க்கு மேற்பட்ட 'ஆதாரக் கிராமங்கள்' ஏற்படுத்தப்பட்







டன. சிறந்த ரகப் பொலிகாளைகள் மூலம் மாத்திரம் கால்நடை இனவிருத்தி செய்யப்படும் கிராமமே 'ஆதாரக் கிராமம்'. கிழட்டுக் கால்நடைகளுக்கும் நோய் விழுந்தவற்றுக்கும் விடுதிகள் (கோ சதனங்கள்) பல அமைக்கப்பட்டன.

கால்நடை அபிவிருத்தி வேலை ஐந்தாண்டு காலத்துக்குள்

பூர்த்தியாகக் கூடியது அல்ல. ஐரோப்பியக் கால்நடைகளுக்கு ஈடான தரத்தை நமது கால்நடைகள் பெறுவதற்குப் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் தேவைப்படும். இரண்டாவது திட்ட காலத்தில் முன்னைவிட இரு மடங்கு 'ஆதாரக் கிராமங்களை' அமைப்பதற்கு உத்தேசித்திருக்கிறோம். கோமாரி, கால் நோய்-வாய்நோய் போன்ற நோய்களைத் தடுப்பதற்கும் பரவலாக ஏற்பாடு செய்யப்படும்.

செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், கோழிகள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்தவும் திட்டங்கள் உள்ளன. செம்மறி ஆடுகளிடமிருந்து கம்பள உரோமம் கிடைக்கிறது. வெள்ளாடுகள் பால் கொடுப்பதுடன் மாமிச உணவாகவும் உபயோகப்படுகின்றன. கோழிகளையும் கோழி முட்டைகளையும் ஏராளமான பேர் சாப்பிடுகிறார்கள். தேனீ வளர்க்கும் குடிசைத் தொழிலும் தற்காலத்தில் பரவி வருகிறது.

மீன் மற்றொரு முக்கியமான உணவுப்பொருள். மீன் உற்பத்தியை அதிகரிப்பதில் சில காலமாக விசேஷ கவனம் செலுத்தி வருகிறோம். முதல் திட்ட காலத்தில் பல கிராமங்களின் கிணறுகள் குளங்களிலும், பெரிய நீர்த்தேக்கங்களிலும் பலவகை மீன் வித்துக்கள் வளர்க்கப்பட்டன. இவ் வேலை இனியும் தொடர்ந்து நடந்துவரும். நம் நாட்டில் விற்பனைக்கு வரும் மீன்களில் பெரும்பாலானவை கடல் மீன்கள்தாம். அதனால் கடல் மீன் பிடிப்பும் அபிவிருத்தி செய்யப்படுகிறது. நாட்டுப் படகுகளுக்குப் பதில் மோட்டார் படகுகள் படிப்படியாக வந்துகொண்டு இருக்கின்றன. கடலில் வேகமாக, அதிக தூரம் சென்று மீன் பிடிப்பதற்கு மோட்டார் படகுகள் உதவுகின்றன. மீன்பிடித் துறைகளும் புதிதாகக் கட்டப்படுகின்றன. பிடித்த மீன்களைப் பக்குவமாகச் சேமித்து வைப்பதற்காகக் குளிர்பதன நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

## கூட்டுறவு

திருந்திய விதைகள், இரசாயன உரங்கள், நவீன கருவிகள் முதலியவற்றை விவசாயி உபயோகிக்க வேண்டும் என்று சொன்னோம். அவ்வாறு சொல்வது எளிதுதான். ஆனால்

இவற்றை எல்லாம் வாங்குவதற்கு விவசாயியிடம் பணம் ஏது? லேவாதேவிக்காரரிடம் அவர் மேன்மேலும் கடன் வாங்க வேண்டுமா? அவ்வாறு அதிக வட்டிக்குக் கடன் வாங்குவது



உசிதமல்ல. ஆனால் நியாய வட்டியில் கடன் கிடைக்க வேறு வழி இருக்கிறதா?



ஆம், வேறொரு வழி இருக்கிறது. கூட்டுறவுக் கடன் சங்கம் ஒன்றில் விவசாயி சேர்ந்தால் குறைந்த வட்டிக்குக் கடன்

கிடைக்கும். இவ்வாறு கடன் கொடுப்பது மாத்திரம் கூட்டுறவு சங்கத்தின் வேலையல்ல. வேறு பல காரியங்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. உதாரணமாக விவசாயப் பண்டங்களை விற்பதற்குக் கூட்டுறவு விற்பனை (மார்க்கட்டிங்) சங்கத்தை அமைக்கலாம். விவசாயிக்கு உரிய லாபத்தில் பெரும் பகுதியை நடுவாந்தரர்கள் தட்டிக்கொண்டு போவதை இதன் மூலம் தடுக்கலாம். இதேபோல், தேவையான பண்டங்களை வாங்குவதற்கும், வீடு கட்டுவதற்கும், பண்டப் போக்குவரத்து வசதிக்கும் கூட்டுறவு சங்கங்களை அமைக்கலாம். பலர் ஒன்று சேர்ந்து பரஸ்பரம் உதவிக்கொள்வதற்குக் கூட்டுறவு சங்கம் வழி செய்கிறது. இச் சங்கங்கள் நன்ருக நடப்பதற்காகப் பாங்குகள் கடனுதவி அளிக்கின்றன.

இரண்டாவது திட்ட காலத்தில் கிராமக் கடன் சங்கங்களையும் மற்றக் கூட்டுறவு சங்கங்களையும் இணைப்பதற்கு உத்தேசித்துள்ளோம். கடன் வாங்குதல், விளைபொருட்களை விற்றல் முதலிய எல்லாக் காரியங்களையும் ஒரே ஸ்தாபனத்தின் மூலம் நடத்துவதற்கு இதனுல் வசதி ஏற்படும்.

கூட்டுறவு சங்கங்களில் அரசாங்கம் பங்காளியாகச் சேர்கிறது என்பது மற்ருெரு முக்கிய விஷயமாகும். இதன் காரணமாகக் கூட்டுறவு இயக்கம் வலிவடைந்து கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு மேன்மேலும் பயன்படும்.

அத்தியாயம் 4

# விவசாயச் சீர்திருத்தங்கள்

விவசாயிகளின் நிலை உயர்ந்தால்தான் விவசாயம் நன்கு வளர முடியும். இதைக் கருத்தில் கொண்டே விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய சீர்திருத்தங்களை அரசாங்கம் இயற்றி வருகிறது.

விவசாயிகளிடம் வரி வசூலிப்பதற்காக ஆங்காங்கே சில நபர்களை அரசாங்கம் முன்காலத்தில் நியமித்திருந்தது. ஜாகீர்தார்கள், ஜமீன்தார்கள், மால்குஜ்தார்கள் என்ற பல்

வேறு பெயர்களால் இந் நபர்கள் அழைக்கப் பட்டனர். காலப் போக்கில் இவர்கள் தங்கள் தங்கள் பிரதேசங்களில் சிற்றரசர் கள் போல ஆகிவிட்டனர். நிலத்தின் மீது அவர்கள் உரிமை பாராட்டவும் விவசாயிகள் மீது அதிகாரம் செலுத்தவும் தொடங்கினர். விவசாயிகள் விளைச்சலில் பெரும் பகுதியை



ஜமீன்தார்களுக்குக் கொடுத்து விட்டு ஓட்டாண்டிகளாயினர். ஜமீன்தார்கள் தவிர, கிராம லேவாதேவிக்காரர்களும் விவ சாயிகளைச் சுரண்டி வந்தனர். கடன் தொல்லைகளால் விவ சாயிகள் அறுவடையான உடனேயே மகசூல்களை வியாபாரி யிடம் குறைந்த விலைக்கு விற்க வேண்டியிருந்தது. இந்த அவல நிலை காரணமாக இந்திய விவசாயி "கடனில் பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனோடு மரிப்பவன்" என்ற வாசகம் பிறந்து விட்டது.

தேச அபிவிருத்தி வேலையைத் தொடங்கிய போது ஒரு முக்கிய குறிக்கோளை நாம் வகுத்துக் கொண்டோம். ஏழை

களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி, செல்வ ஏற்றத் தாழ்வு களைக் குறைக்க வேண்டும் என்பதே அந்தக் குறிக்கோள். ஆகவே நில உடைமையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளையும் குறைப் பது அவசியமாகிறது. தவிர, உழைக்கும் விவசாயிகளுக்கு நியாயம் வழங்கினால்தான் அவர்கள் உற்சாகத்துடன் பாடு பட்டு உற்பத்தியைப் பெருக்குவர்.

விவசாயிகளின் நிலையை உயர்த்துவதற்கு முதல் நடவடிக் கையாக ஜமீன்தாரி முறை ஒழிக்கப் பட்டது. அநேகமாக எல்லா ராஜ்யங்களிலும் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டங்கள் நிறைவேறி விட்டன. ஒரு சில பிரதேசங்களில் மாத்திரமே இவ்வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை. அரசாங்கத்துக்கும் விவசாயிகளுக்கும் குறுக்கே இருந்து வந்த ஜமீன்தார்கள் விலகி விட்டனர். இப்போது அரசாங்கத்துக்கும் விவசாயி களுக்கும் இடையே நேரடியான உறவு ஏற்பட்டு விட்டது. ஜமீன்தார் போன்ற நடுவாந்தரர் எவரும் அவர்களை இனிச் சுரண்ட முடியாது.

நமது விவசாயிகளில் பலருக்குச் சொந்த நிலம் இல்லை. பிறரது நிலங்களை இவர்கள் வாரம் அல்லது குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்கிறார்கள். இவர்களைச் 'சாகுபடியாளர் கள்' என்று குறிப்பிடுகிறோம். இந்தச் சாகுபடியாளர் களுக்கும் அரசாங்கம் உதவி அளித்து வருகிறது. ஒரு நியாய மான அளவுக்கு மேல் இவர்களிடமிருந்து நிலச்சுவான் மேல் வாரம் கேட்கக் கூடாது என்று பல ராஜ்யங்களில் ஒழுங்கு செய்யப் பட்டிருக்கிறது. நியாயமான காரணம் இல்லாமல் நிலத்திலிருந்து சாகுபடியாளர்களை வெளியேற்றக் கூடாது என்றும் தடை விதிக்கப் பட்டிருக்கிறது. இன்னொரு வழியிலும் சாகுபடியாளருக்கு உதவலாம். அதாவது தாங்கள் பயிரிடும் நிலங்களைச் சுலப முறையில் அவர்கள் விலைக்கு வாங்கிக் கொள்ள வசதி செய்யலாம்.

சீர்திருத்தங்களின் விளைவாகச் சுவான்தார்களின் நிலங் கள் எல்லாம் பறிமுதல் செய்யப்படும் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். பறிமுதல் செய்யும் உத்தேசமே இல்லை. ஆயினும் ஒருவரிடம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நிலம் இருக்கக் கூடாது என்று வரம்பு கட்டும் உத்தேசம் உண்டு. இந்த



வரம்பு எல்லாப் பிரதேசங்களிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டியதில்லை. ஸ்தல நிலைமைகளுக்கு ஏற்ப வரம்பின் அளவும் மாறுபடும். நிலச்சுவானும் அவரது குடும்பத்தினரும் சொந்தமாக எவ்வளவு நிலத்தைப் பயிரிட முடியுமோ, அதைப்போல் மூன்றுமடங்கு நிலப் பரப்பை உயர்ந்த பட்ச வரம்பாக நிர்ணயிக்கலாம். இது குத்துமதிப்பான வரம்பு தான். ஆனால் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் பெரிய பண்ணைகளுக்கு இவ்வாறு வரம்பு கட்டும் உத்தேசம் இல்லை. அதே போல் தேயிலைத் தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள் முதலியவற்றிற்கும் வரம்பு இருக்காது.

பெரிய நிலவுடைமைகளால் சங்கடம் ஏற்படுவதை மேலே பார்த்தோம். அதே போல் சிறிய நிலவுடைமைகளாலும் மற்றொரு சங்கடம் ஏற்படுகிறது. நமது வாரிசு உரிமை முறைதான் இந்த இரண்டாவது சங்கடத்துக்குக் காரணம். ஒரு விவசாயி இறந்தால் அவரது நிலத்தை அவருடைய பிள்ளைகள் பாகப் பிரிவினை செய்து கொள்கிறார்கள். பின்னர் அவர்கள் இறந்தால் அவர்களுடைய வாரிசு

களை பங்கிட்டுக் கொள்கிருர்கள். இவ்விதம் தலைமுறை தலைமுறையாக நிலம் துண்டு போடப் படுகிறது. கடைசியில் விவசாயியின் நிலவுடைமை சிறு சிறு பாத்திகளாக அங்குமிங்கும் சிதறி விடுகிறது. இந்தச் சின்னஞ்சிறு நிலங்களைச் சிறந்த முறையில் சாகுபடி செய்ய முடிவதில்லை. அதனால் விவசாயம் இலாபகரமாக இருப்பதில்லை. இந்தத் துண்டு நிலங்களை இணைக்க வேண்டும். விவசாயிகள் பரஸ்பரம் நிலங்களைப் பரிவர்த்தனை செய்வதன் மூலம் இவ்வாறு இணைத்துக் கொள்ளலாம். இது ஒரு வழி.

இன்னொரு சிறந்த பரிகாரமும் உண்டு. அதுவே கூட்டுறவு விவசாய முறை. தற்போது ஒவ்வொரு விவசாயியும் தனது வேலைகள் அனைத்தையும் தானே கவனித்துக் கொள்ளவேண்டி யிருக்கிறது. உழுதல், தண்ணீர் பாய்ச்சுதல், எருவிடுதல், விதைத்தல், களை பறித்தல், அறுவடை செய்தல், மகசூலை விற்றல் முதலிய எல்லாக் காரியங்களுக்கும் ஒவ்வொரு விவசாயியும் பொறுப்பு ஏற்கவேண்டி யிருக்கிறது. அவர் ஒரு கூட்டுறவு விவசாயச் சங்கத்தில்



சேர்ந்தால் அவருடைய கவலைகள் குறைந்துவிடும். விதை வாங்குதல், மகசூலை விற்றல் முதலிய காரியங்களைச் சங்கமே எல்லோர் சார்பிலும் கவனித்துக் கொள்ளும். கூட்டுறவு சங்கத்தில் சேரும் விவசாயிகளின் துண்டு நிலங்கள் எல்லாம் ஒரு பெரிய பண்ணையாக இணைந்துவிடும். பெரிய நிலப் பரப்பில் நவீன விவசாயக் கருவிகளையும் புதிய வேளாண்மை முறைகளையும் கையாளலாம். இதன் விளைவாக மகசூல் அதிகரிக்கும். சங்கத்தில் சேரும் ஒவ்வொரு விவசாயியும் தம்மால் இயன்ற அளவு உழைத்தால் போதும். அவருடைய நிலத்தின் அளவுக்கு ஏற்ற விகிதத்தில் அவருக்கு இலாபத்தில் பங்கு கிடைத்துவிடும்.

ஆகவே கூட்டுறவு விவசாய சங்கத்தில் சேர்வது நல்லது. இத்தகைய சங்கங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் தற்போது இந்த முறை ஆரம்ப கட்டத்தில் தான் இருக்கிறது. எல்லா இடங்களிலும் கூட்டுறவுப் பண்ணைகளைத் துரிதமாக அமைத்தால் என்ன என்று நீங்கள் கேட்கலாம். விவசாயிகளுக்குத் தங்கள் நிலத்தின் மீது மிகுந்த பாசம் உண்டு. அவசரமாக நிலங்களை இணைத்தால் தங்கள் நிலத்தைப் பறிகொடுத்தது போல அவர்கள் வருந்துவர். எனினும் கூட்டுறவுப் பண்ணையில் அதிக வருமானம் கிடைக்கும் என்பதை அவர்கள் காலப்போக்கில் உணரலாம். அப்போது அவர்கள் சந்தோஷமாகக் கூட்டுறவு முறையில் சேர்வர். கூட்டுறவு முறையின் நன்மைகளை அவர்களுக்கு உணர்த்துவதற்கு முயன்று வருகிறோம். நாளாவட்டத்தில் கூட்டுறவு விவசாயம் பரவிப் படரும் என்பது உறுதி.

அத்தியாயம் 5

## ஆறுகளை அடக்குதல்

இந்தியாவில் எத்தனையோ மாபெரும் நதிகள் உள்ளன. உங்கள் பூகோளப் புத்தகத்தில் இவை சம்பந்தமாகப் படித்திருப்பீர்கள். சட்லஜ், கங்கை, யமுனை, கோஸி, கண்டக், பிரம்ம

புத்திரா முதலிய நதிகள் வடஇந்தியாவில் ஓடுகின்றன. தப்தி, நர்மதை முதலிய நதிகள் மத்திய இந்தியாவில் ஓடி அரபிக் கடலில் விழுகின்றன. கிருஷ்ணு, காவேரி, கோதாவரி, மகாநதி முதலிய தென்னிந்திய நதிகள் வங்காளகுடாக் கடலில் சங்கமம் ஆகின்றன.

மலையில் பெய்த மழைநீரைச் சேகரித்துக்கொண்டு பேராவேசத்துடன் நதி இறங்குகிறது. அதன் வேகத்தை எதிர்த்து நிற்க எதனுலும் முடியாது. பெரிய மரங்களையும் பாறைகளையும்கூட அது அடித்துச் செல்கிறது. பிரம்மாண்ட அசுரனைப்போல அது சீறுகிறது. மலையில் சேகரித்த ஏராளமான வண்டல் மண்ணுடன் சமவெளியில் இந்நதி ஓடுகிறது. ஆற்றுப் படுகையில் வண்டல் படிந்து மேடிட்டு விடுவதால் தண்ணீர் கரையை மீறிக்கொண்டு பாய்கிறது. வெள்ளத்தினுல் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர் நிலங்கள் பாழாகின்றன; நூற்றுக்கணக்கான கால்நடைகள் பலியாகின்றன; ஏராளமான மக்கள் வீடு இழந்து தவிக்க நேரிடுகிறது. இவ்வாறு நாசத்தை விளைவித்துக் கொண்டு செல்லும் ஆற்றின் வெள்ளத்தைக் கடைசியில் கடல் என்ற மிகப் பெரிய அசுரன் விழுங்கிவிடுகிறது.



ஆறு கரையடங்கிச் சென்ருல் ஜனங்கள் வாய்க்கால் வெட்டிப் பயிர் செய்யலாம். தவிர, போக்குவரத்துக்கு நதிக் கரையை உபயோகிக்கலாம். ஆனுல் கரைகளை உடைத்துக் கொண்டு வெள்ளம் பாய்ந்தால் பெருவாரியான சேதம் விளைகிறது. இதற்காக நதிகளைக் குற்றம் சொல்லமுடியுமா? அவை நமக்கு உதவுவதில்லை என்று கூற முடியுமா? அதைவிட நாம்தான் நதியின் உதவியை நாடவில்லை என்று கூறுவதே பொருத்தம்.

நதிகளிடம் ஏராளமான தண்ணீர் இருக்கிறது. அந்தத்

தண்ணீர் வீணாகக் கடலில் போய் விழுகிறது. நாடு முழுதிலும் 16 அங்குல அகழம் தேக்கி வைப்பதற்குப் போதுமான தண்ணீர் இவ்வாறு ஆண்டுதோறும் வீணாகிறது. நமது பயிர்கள் தண்ணீர் இன்றி வாடும்போது இவ்வாறு ஆற்று நீர் அவலமாகிறது. பாறைகளையும் மரங்களையும் பெயர்த்துச் செல்லும் சக்தி நதிக்கு உண்டு அல்லவா? இந்தச் சக்தியும் வீணாக்கப்படுகிறது. இச் சக்தியைப் பயன்படுத்தி மின்சார விசையை உற்பத்தி செய்ய முடியும்.

நதிகளை வசப்படுத்தி நமக்குப் பயன்படுமாறு செய்வது எங்ஙனம்? நதிகளின் குறுக்கே பெரிய அணைகளைக் கட்டுவதுதான் அதற்கு வழி. ஓடுகிற நீரைத் தடுத்துச் சேமித்து வைப்பதற்கு அணைகள் உதவுகின்றன. நீரின் ஓட்டத்தை அணை கட்டுப்படுத்துவதால் வெள்ளத்தைத் தடுக்க முடிகிறது. அணைத் தேக்கத்திலிருந்து இறங்கும் நீரின் விசையால் 'டர்



பைன்' என்ற சக்கரத்தைச் சுழலவைத்து மின்சாரம் தயாரிக்கலாம். தொழிற்சாலைகளில் விசையாகவும், வீடுகளில் வெளிச்சத்துக்கும், வேறு பல காரியங்களுக்கும் மின்சாரம் பயன்படுகிறது. இவ்விதம் அணைகள் நமக்குப் பேருதவி செய்கின்றன.

நதிகளின் உபயோகத்தை நம் முன்னோர்கள் நன்கு அறிந்திருந்தனர். புராதன காலத்திலேயே நம் நாட்டில் நீர்ப்

பாசனக் கால்வாய்கள் வெட்டப்பட்டன. இவை குறித்து வேதங்கள் கூடப் பிரஸ்தாபிக்கின்றன. பின்னர் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் உத்தரப் பிரதேசம், பஞ்சாப், சென்னை முதலிய பிரதேசங்களில் அணைகள் கட்டப்பட்டன. ஆற்றின் விசையிலிருந்து மின்சாரம் தயாரிக்கவும் 1897 முதல் ஏற்பாடு செய்யப் பட்டது. அவ் வாண்டில் டார்ஜீலிங்கில் இந்தியா வின் முதலாவது மின்சார நிலையம் நிறுவப் பட்டது.

ஆனால் இந்த அணைகளும் மின்சார நிலையங்களும் நாட்டின் தேவையில் ஒரு சிறிய பகுதியைத்தான் பூர்த்தி செய்தன. அகில இந்திய அடிப்படையில் நதி வளத்தைப் பயன் படுத்தப் பிரம்மாண்ட முயற்சி எதுவும் அப்போது நடக்க வில்லை. நாம் சுதந்திரம் பெற்று ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்த பிறகே இத்தகைய முயற்சி ஆரம்பமாயிற்று.

பாக்ரா-நங்கல் அணைத் திட்டம் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். இத் திட்டம் பஞ்சாபில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நாம் கட்டி வரும் வேறு எந்தப் பெரிய அணையை யும் விட அதிகமான பணம் பாக்ரா-நங்கல் திட்டத்துக்குச் செலவாகும். இந்தத் திட்டத்தின்படி சட்லஜ் நதி மீது இரு பெரும் அணைகள் கட்டப் படுகின்றன. நான்கு மின்சார உற் பத்தி நிலையங்களும் நிர்மாணிக்கப் படுகின்றன. அணையி லிருந்து தண்ணீரை வடமேற்கு இந்தியாவின் பல பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்காக ஏராளமான கால்வாய்கள் வெட்டப் படுகின்றன. 1960-ல் இந்தத் திட்டம் பூர்த்தியாகக் கூடும். தேசப் பிரிவினை காரணமாக 'பஞ்சாப் கால்வாய்கள்' பாகிஸ் தானுக்குப் போய்விட்டன அல்லவா? அதனால் நமக்கு ஏற் பட்ட நஷ்டத்தை பாக்ரா-நங்கல் திட்டம் ஈடு செய்துவிடும் என்பது குறிப்பிடத் தக்கது.

'தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம்' மற்றொரு முக்கிய மான திட்டமாகும் இதன்படி, வங்காளத்திலும் பீஹாரிலும் அணைகள் கட்டப்படுகின்றன. பூசாரம் நிறைந்த பரந்த பிர தேசத்திற்கு இதன் மூலம் பாசன வசதி கிடைக்கும். தாமோ தர் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் இரும்பு, நிலக்கரி, செம்பு, மைக்கா போன்ற கனிகளும் நிறைந்திருக்கின்றன. அதனால் அங்கு தொழில்கள் பல வளர்ந்து வருகின்றன. இத்தொழில்

களுக்கு வேண்டிய விசையை அளிப்பதற்காக மின்சார உற்பத்தி நிலையங்கள் அமைக்கப் படுகின்றன.

இன்னும் பல பெரிய அணைத் திட்டங்களும் ஏராளமான சிறிய அணை வேலைகளும் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப் பட்டன. ஒரிஸ்ஸாவில் மகாநதியை வசக்குவதற்காக ஹிராகுட் திட்டம் வகுக்கப்பட்டது. ஆந்திராவின் நாகார்ஜுன சாகர் திட்டம், சென்னையின் கீழ்பவானித் திட்டம் முதலியவை வேறு சில உதாரணங்கள்.

முதல் திட்ட காலத்தில் ஆரம்பமான பெரிய அணை வேலைகள் பெரும்பாலும் இரண்டாவது திட்ட காலத்தில் பூர்த்தி




யாகிவிடும். அவை தவிர, அடுத்த ஐந்தாண்டுகளில் பல புதிய அணை வேலைகளும் ஆரம்பிக்கப்படும். அதாவது, பாசன வசதிக்காக 188 புதிய அணை வேலைகள் மேற்கொள்ளப் படும். நீரிலிருந்தும், நீராவியிலிருந்தும் மின்சார விசையை உற்பத்தி செய்வதற்காக 44 திட்டங்கள் நிறைவேற்றப்படும். இந்தப்



புதிய திட்டங்கள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டால் நாட்டின் நதிகளில் பெரும்பாலானவை ஓரளவு வசப்பட்டு விடும்.

பெரிய அணை வேலைகள் மூலம் இரண்டாவது திட்ட காலத்தில் சுமார் 120 லட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இது மேற்கு வங்காள விஸ்தீரணத்தில் பாதிக்கு மேற்பட்ட நிலப் பரப்பு ஆகும்! தவிர, 1960-61 வாக்கில் இப்போதை விட இரு மடங்கு மின் சாரம் உற்பத்தியாகும். அதாவது சராசரி நபருக்கு 50 யூனிட்டு கள் வீதம் மின்சாரம் உற்பத்தியாகும். ஒரு மனிதன் பத்து மணி நேரம் வேலை செய்வதற்குச் சமமானது ஒரு யூனிட் என்று குத்துமதிப்பாகக் கூறலாம். மின்சார உற்பத்திப் பெருக்கமானது தொழில்கள் பல்கிப் பெருகுவதற்கு உதவும். அதோடு சுமார் 10,000 சிறிய டவுன்களுக்கும் கிராமங்களுக் கும் மின்சார வசதி புதிதாகக் கிடைக்கும்.

இந்தப் பாசன, மின்சாரத் திட்டங்கள் குறித்து நாம் பெருமிதம் அடையலாம். மாபெரும் நதிகளை வசப்படுத்தி மக்களுக்குத் தொண்டாற்றச் செய்யும் காரியம் நமது ஐந் தாண்டுத் திட்டத்தின் அரும் பெரும் சாகசங்களில் ஒன்று.

அத்தியாயம் 6

# மௌனப் புரட்சி

**ச**முதாய அபிவிருத்தித் திட்டம் பற்றி, கிராமங்களில் நடக் கும் அந்த மௌனப் புரட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டிருப் பீர்கள். அத் திட்டத்தின் மூலம் நடக்கும் நல்ல காரியங்களை யும் கேட்டிருப்பீர்கள். 'சமுதாய அபிவிருத்தி'யை ஒரு அற் புதம் என்று எல்லோரும் புகழ்கிறார்கள். ஆனால் சமுதாய அபிவிருத்தியின் பொருள் எல்லோருக்கும் தெரியுமா என்பது சந்தேகமே.

சமுதாயம் என்றால் என்ன? ஒரு ஸ்தலத்தில் சேர்ந்து வாழும் மக்கள்-கூட்டத்தைச் சமுதாயம் என்று குறிப்பிட லாம். ஆகவே சமுதாயம் என்றால் **மக்கள்** என்று அர்த்தம். சமுதாய அபிவிருத்தி என்றால் மக்களின் அபிவிருத்தி என்று பொருள்படும்.

மக்களை எவ்வாறு அபிவிருத்தி செய்வது? அவர்கள் படிப்பதற்குப் பள்ளிகளையும், வைத்தியத்துக்கு ஆஸ்பத்திரிகளையும் கட்டுவதுதான் அபிவிருத்தியா? மக்களை அபி, விருத்தி செய்ய இவை மாத்திரம் போதா. மக்களின் மனம் முதலில் அபிவிருத்தி அடைய வேண்டும். நமது கிராமவாசிகளின் வாழ்க்கை பல நூற்றுண்டுகளாக மாறுதலே இன்றி ஒரேமாதிரி நடந்து வருகிறது. அதனுல் தடத்தில் செல்லும் வண்டியைப் போல மக்கள் ஆகிவிட்டனர். தடம் மாறிச் செல்வதற்கு, அதாவது புதிய மாறுதல்களை ஏற்பதற்கு அவர்கள் விரும்புவதில்லை. நமது மூதாதையர்கள் செய்யாததை நாம் ஏன் செய்யவேண்டும் என்று அவர்கள் நினைக்கிருர்கள். பள்ளி



களையும், ஆஸ்பத்திரிகளையும் மக்கள் விரும்பாவிடில், அவற்றை அமைப்பதில் என்ன பலன்? ஆகவே இந்த வசதிகளை எல்லாம் மக்கள் **விரும்பும்படி** முதலில் செய்யவேண்டும். தூங்குகிற மக்களைத் தட்டி எழுப்பி, உலக மாறுதல்களை அவர்களுக்குத்

தெரிவிக்க வேண்டும். இதற்காக ஒரு சரியான நபரைக் கிராமத்துக்கு அனுப்ப வேண்டும்.

சமுதாய அபிவிருத்தித் திட்டம் இவ்வாறு ஒரு தூதரைக் கிராமத்துக்கு அனுப்புகிறது. நல் வாழ்வு என்ற செய்தியுடன் அவர் கிராம மக்களிடம் செல்கிறார். இந்தத் தூதரைக் 'கிராம சேவக்' அல்லது 'கிராம நிலை ஊழியர்' என்று அழைக்கிறோம். சமுதாயஅபிவிருத்தித் திட்டத்துக்கு அச்சாணி போன்றவர் அவர். கிராமவாசிகளுடன் அவர் வசித்து அவர்களுடைய பிரச்னைகளை ஆராய்கிறார். பழகப் பழக அவரிடம் கிராமவாசிகளுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. அவர் சொல்வதை அவர்கள் கவனமுடன் கேட்கிறார்கள். பின்னர் கிராமத்துக்கு அவசியமான ஏதாவது ஒரு காரியத்தைக் கிராம சேவக் பிரஸ்தா



பிக்கிறார். உதாரணமாக, கிராமத்திலிருந்து சந்தை ஸ்தலத்துக்கு ஒரு ரஸ்தாவைப் போடலாம் என்று அவர் யோசனை கூறுகிறார். விளை பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு போய் விற்பதற்கு இந்த ரஸ்தா உதவும் என்று விளக்குகிறார். இதற்காகக் கிராமவாசிகள் உழைப்பும் ஓரளவு நிதியும் கொடுத்தால் அரசாங்கமும் உதவி அளிக்கும் என்று அவர் தெரிவிக்கிறார்.

இவ்வாறு அபிவிருத்தி வேலை ஆரம்பமாகிறது. ஆரம்பமானபின் கஷ்டம் இல்லை. ரஸ்தா போடுவது வெற்றிகரமாக

முடிகிறது. பின்னர் ஒரு பள்ளியைக் கட்டவோ, குடி தண்ணீருக்கு வசதி செய்யவோ கிராமவாசிகள் விரும்புகிறார்கள். மக்களது ஒத்துழைப்பினாலும் சர்க்காரின் உதவியினாலும் இந்த வேலையும் நிறைவேறுகிறது. கூடி உழைப்பதன் பலன்களைக் கண்டு கிராமவாசிகள் ஆச்சரியமடைகிறார்கள். ஒன்றன்பின் ஒன்றாகப் பல அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்ற அவர்கள் விரும்புகிறார்கள். முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் வளர்கிறது.

இவ்வாறு கிராமவாசிகளிடையே விழிப்பு ஏற்பட்ட பின் கிராமசேவக் பின்னணிக்குப் போய்விடுகிறார். ஏனெனில் மக்களுக்குத் தலைமை தாங்குவது அவரது வேலை அல்ல. அவர்களிடையே எழுச்சியை ஏற்படுத்திச் செயலில் இறங்கத் தூண்டுவதுதான் அவரது அலுவல். ஆயினும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் அவர் செய்கிறார். அரசாங்க நிபுணர்களைக் கிராமத்துக்கு அவர் தருவிக்கிறார். உதாரணமாக, ரஸ்தா அமைக்கப் பட்டால் ஒரு ரஸ்தா என்ஜினியர் வருகிறார். பள்ளிக்கூடம் அல்லது ஆஸ்பத்திரிக்குக் கட்டடம் வேண்டும் என்றால் கட்டடச் சிற்பி வருகிறார். சிறந்த விவசாய முறைகளைப் போதிப்பதற்கு விவசாய நிபுணர் வருகிறார். இவ்வாறு கிராம மக்கள் நல்வாழ்வு பெறுவதற்காக அவர்களுடன் ஜில்லா அதிகாரிகள் சேர்ந்து பாடுபடுகிறார்கள்.

சமுதாய அபிவிருத்தித் திட்டம் 1952-ஆம் ஆண்டில் ஆரம்பமாயிற்று. இந்தியாவில் உள்ள ஐந்தரை லட்சம் கிராமங்களிலும் திட்டத்தை உடனடியாக அமல் நடத்துவதற்குப் போதிய நிதியோ சிப்பந்திகளோ இல்லை. அதனால் பொறுக்கியெடுத்த சில பிரதேசங்களில் மாத்திரம் திட்டம் முதலில் ஆரம்பிக்கப் பட்டது. திட்டப் பிரதேசம் (புராஜெக்ட்) ஒவ்வொன்றும் மும்மூன்று வட்டாரங்களாக (பிளாக்குகள்) பிரிக்கப் பட்டது. சுமார் நூறு கிராமங்களையும், 60,000 முதல் 70,000 வரை ஜனத் தொகையையும் கொண்டது ஒரு வட்டாரம்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தைக் கிராமவாசிகள் ஆர்வமுடன் வரவேற்றனர். தங்கள் ஊர்களிலும் திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று வேறு பல பிரதேசங்களைச்

சேர்ந்த மக்கள் கோரினர். எல்லா இடங்களிலும் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை அமல் நடத்த வசதியில்லை என்று முன்பே குறிப்பிட்டோம். ஆயினும் அதிகமான பிரதேசங்களின் அபிவிருத்திக்கு உதவக் கூடிய வேறொரு திட்டத்தைச் சர்க்கார் வகுத்தது. அதுவே தேசிய விஸ்தரிப்புத் திட்டம். (விஸ்தரிப்பு என்றால் விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகளை அனுஷ்டானத்துக்குப் பரப்புவது என்று அர்த்தம்). கிராமவாசிகள் விஞ்ஞான ரீதியாக வாழ்க்கையை நடத்த உதவும் திட்டம் இது. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை விடக் குறைவான அலுவல்களைக் கொண்டது தேசிய விஸ்தரிப்புத் திட்டம். சமுதாய அபிவிருத்தி வட்டாரத்தில் விவசாயம், சுகாதாரம், கல்வி, ரஸ்தா அமைப்பு, ஜாகை வசதி, கிராமத் தொழில்கள், கூட்டுறவு சங்கங்கள் முதலிய எல்லாத் துறைகளும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. ஆனால் தேசிய விஸ்தரிப்பு வட்டாரத்தில் விவசாயம்தான் முக்கியமாக அபிவிருத்தி செய்யப் படுகிறது; அதற்கு அடுத்தபடியாகவே மற்றத் துறைகள் கவனிக்கப் படுகின்றன. ஒரு பிரதேசத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டம் மூன்று ஆண்டுகள் அமல் நடக்கும்; தேசிய விஸ்தரிப்புத் திட்டம் நிரந்தரமாக அமல் நடக்கும்.

இரு திட்டங்களின் பெயர்கள் வேறுபட்ட போதிலும் சமுதாய அபிவிருத்தி என்ற ஓரே இயக்கத்தின் இரு கிளைகள் தாம் அவை. முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நாட்டில் மொத்தம் 1,200 வட்டாரங்கள் இருந்தன. இவற்றில் தேசிய விஸ்தரிப்புத் திட்ட வட்டாரங்கள் 900; மற்றவை சமுதாய அபிவித்தி வட்டாரங்கள்.

சமுதாய அபிவிருத்தி வட்டாரத்தை விடத் தேசிய விஸ்தரிப்பு வட்டாரத்தில் குறைவான வேலைகளே நடக்கின்றன அல்லவா? அதனால் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தைவிட தேசிய விஸ்தரிப்புக்குக் குறைவான நிதியே செலவாகும். இப்போது புதிதாக அமைக்கப்படும் வட்டாரங்கள் எல்லாம் தேசிய விஸ்தரிப்பு வட்டாரங்களே. இவ்வட்டாரங்களில் 'விஸ்தரிப்பு' வேலைகள் பூர்த்தியான பின், இவை சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களாக மாற்றப்படும்.

தற்போது நாட்டில் கால் பங்குப் பிரதேசத்தில் சமுதாய

அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாவது திட்ட காலத்தில் இந்தியா முழுதிலும் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தைப் பரப்புவதற்கு உத்தேசித்துள்ளோம். இதற்காகச் சுமார் 3,800 புதிய வட்டாரங்களை ஆரம்பிக்க வேண்டியிருக்கும். இவற்றில் 1,120 வட்டாரங்கள், முதிர்ச்சி பெற்றபின் சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களாக மாற்றப்படும்· இவ்வாறு நாடு முழுதிலும் திட்டம் பரவிவிட்டால் எல்லாக் கிராமங்களும் புத்துயிர் பெற்றுவிடும்.

அத்தியாயம் 7

# தொழில் வளர்ப்போம்

உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றும் நமக்கு அத்தியாவசியமானவை என்று முன்னொரு அத்தியாயத்தில் பார்த்தோம். இவை தவிர மற்றப் பொருள்கள் இல்லாமல் நாம் உயிரோடு இருக்க முடியும். ஆயினும் அந்தப் பொருள்கள் வேண்டியதில்லை என்று கூற முடியாது. அவ்வாறு கூறினால் ஆதிகால மனிதர்களின் அநாகரிக நிலைக்கு நாம் திரும்ப வேண்டியிருக்கும்

பல்லாயிரம் வருஷங்களாக மனிதன் முன்னேறி வருகிறான். அவ்வாறு முன்னேறும் போது புதிது புதிதாகப் பல்வேறு பொருள்கள் அவனுக்குத் தேவைப் படுகின்றன. அதாவது நாகரிகம் வளர வளர மனிதனின் தேவைகளும் அதிகரித்து வந்திருக்கின்றன. நீண்டகாலமாக இந்தப் பொருள்களையெல்லாம் கைத்தொழிலாளர்கள் தயாரித்து வந்தார்கள். பின்னர் 18-வது நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பியர்கள் இயந்திரங்களைக் கண்டுபிடித்தனர். கைகளை விடத் துரிதமாகவும் மலிவாகவும் பண்டங்களை உற்பத்தி செய்ய வல்லவை இயந்திரங்கள்.

இவ்வாறு ‘இயந்திர யுகம்’ பிறந்தது. இதையே ‘தொழில் புரட்சி’ என்று கூறுகிறோம். இந்தப் புரட்சியின் விளைவாகக்



குறுகிய காலத்துக்குள் மக்களின் வாழ்க்கை அடியோடு மாறி விட்டது. புதிய கருத்துக்களும் புதிய கண்டுபிடிப்புகளும்

வெள்ளம் போல் வந்த வண்ணம் இருந்தன, இன்னமும் வந்து கொண்டு இருக்கின்றன. இவ்வாறு விஞ்ஞானமும் தொழில்களும் சேர்ந்து ஒரு அற்புத உலகத்தை உருவாக்கி விட்டன.

இயந்திரத் தொழில்கள் உலகெங்கும் ஒரே மாதிரியாக வளரவில்லை. தொழில் புரட்சியை முதலில் ஆரம்பித்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் தாம் வெகு காலத்துக்கு முன்னணியில் நின்றன. பின்னர் அமெரிக்காவும் (யு. எஸ். ஏ.), ரஷியாவும் அந்நாடுகளை விடத் தொழில் துறையில் முன்னேறின. ஆனால் இவ்விஷயத்தில் நாம் பெரிதும் பின் தங்கி நின்று விட்டோம். 1947-ல் நம் நாடு சுதந்தரம் பெற்ற பிறகே நாம் ஆரம்ப கட்டத்திலிருந்து புறப்பட்டோம்! ஆகவே தொழில் வளம் மிகுந்த மற்ற நாடுகளை எட்டிப் பிடிப்பதற்கு நாம் வெகு தூரம் முன்னேற வேண்டியிருக்கிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட தொழில் வளர்ச்சிக்கு முக்கிய ஸ்தானம் அளிக்க முடியவில்லை. ஏனெனில் மக்களின் பசியைத் துடைப்பதற்காக உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் அவசரமாகக் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. ஆயினும் கடந்த ஐந்து வருஷங்களில் பல தொழிற்சாலைகளை அரசாங்கம் ஏற்படுத்தி யுள்ளது. நாட்டின் நலனுக்கு மிகவும் அவசியமான தொழிற்சாலைகள் அவை.

இப்போது உணவுக் கஷ்டம் குறைத்திருப்பதால் தொழில்களை வளர்ப்பதில் முன்னைவிட அதிகக் கவனம் செலுத்த முடியும். அதனால்தான் இரண்டாவது திட்ட நிதியில் 20 சதவிகிதத்தைத் தொழில்கள், சுரங்கங்கள் ஆகியவற்றுக்காகச் செலவிட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

எல்லாத் தொழில்களுக்கும் இன்றியமையாத பொருள் எஃகு. கப்பல் முதல் குண்டூசி வரை பல பண்டங்களை எஃகு இல்லாமல் தயாரிக்க முடியாது. அதனால்தான் நமது தொழில் திட்டத்தில் எஃகு உற்பத்திக்கு முதலிடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இரண்டாவது திட்ட காலத்தில் மூன்று பிரம்மாண்ட எஃகுத் தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படும். ஒரிஸ்ஸாவில் உள்ள ரூர்கேலா, மத்தியப் பிரதேசத்தில் உள்ள பிலாய், மேற்கு வங்காளத்தில் உள்ள துர்காபூர் என்ற மூன்று ஊர்களில் இவை ஏற்படுத்தப்படும். இவை தவிர இந்தியா


இந்தியா
சில முக்கிய தொழில்கள்
காஷ்மீர்
ஹி. பி
ரசாயன உரம்
நங்கல்
பஞ்சாப்
டில்லி
ராஜஸ்தான்
உத்திரப் பிரதேசம்
பீஹார்
அஸ்ஸாம்
ரசாயன உரம்
சிந்திரி
துர்காபூர்
மேற்கு
வங்காளம்
மத்திய பிரதேசம்
பிலாய்
ரூர்கேலா
ஒரிஸா
பம்பாய்
இயந்திரக் கருவி
அம்பர்நாத்
அணு சக்தி
எண்ணெய ஆலே
பிம்பரி
பெனிசிலின்
எண்ணெய ஆலே
கப்பல் தளம்
விசாகபட்டினம்
அரபிக் கடல்
ஆந்திரப் பிரதேசம்
வங்காள விரிகுடா
மைசூர்
விமானம்
டெலிபோன்
பெங்களூர்
இயந்திரக கருவி
ஜலஹள்ளி
ரயில பெட்டி
பெரமபூர்
நெய்வேலி
ரசாயன உரம்
யுரேனியம்
ஆலவே
கேரளா
சென்னை

வில் ஏற்கெனவே மூன்று எஃகுத் தொழிற்சாலைகள் இருந்து வருகின்றன. மைசூர் இரும்பு-எஃகு தொழிற்சாலை இவற்றுள் ஒன்று. இது அரசாங்க உடைமையில் இருக்கிறது. மற்ற இரண்டும் தனிப்பட்ட தொழில் அதிபர்களுக்குச் சொந்தமானவை. ஜாம்ஷெட்பூரில் உள்ள டாட்டா இரும்பு-எஃகுத் தொழிற்சாலையும், பர்ன்பூரில் உள்ள இந்திய இரும்பு-எஃகுக் கம்பெனியின் ஆலையுமே அவை.

1960-61 வாக்கில் இந்தியாவின் வருஷவாரி எஃகு உற்பத்தி 45 லட்சம் டன்னுகை அதிகரிக்கும். ஆயினும் முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிட்டால் இது சொற்பம்தான். உதாரணமாக அமெரிக்காவில் ஆண்டுதோறும் 10 கோடி டன் எஃகுக்கு மேல் உற்பத்தியாகிறது! ரஷியா 4 கோடி டன்னுக்கு மேல் உற்பத்தி செய்கிறது. இதிலிருந்து தொழில் துறையில் நாம் எவ்வளவு பின்தங்கி நிற்கிறோம் என்பதை அறியலாம்.

விவசாய விளைச்சல் அதிகரிப்பதற்கு இரசாயன உரங்கள் அவசியமானவை என்று முன்பே குறிப்பிட்டோம். இந்த



உரங்களைத் தயாரிப்பதற்காக பீஹாரிலுள்ள சிந்திரி என்ற ஸ்தலத்தில் ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டது. ஆனல் இந்தத் தொழிற்சாலை உற்பத்தி செய்வதை விட மிக அதிகமான இரசாயன உரங்கள் நம் விவசாயிகளுக்குத் தேவைப் படுகின்றன. அதனுல் இரண்டாவது திட்ட காலத்தில் மேலும்

மூன்று இரசாயன உரத் தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்படும். ரூர்கேலாவில் ஒன்றும், பஞ்சாபைச் சேர்ந்த நங்கலில் ஒன்றும் தென்னார்க்காடு ஜில்லா நெய்வேலியில் ஒன்றுமாக அவை நிறுவப்படும்.

நங்கல் இரசாயன உரத் தொழிற்சாலையில் கன நீரும் (Heavy water) உற்பத்தி செய்யப்படும். அணுசக்தி தயாரிப்பதற்குக் கன நீர் அவசியம். புதிய கண்டுபிடிப்பான அணுசக்தி மனிதர்களின் நல் வாழ்விற்குப் பெரிதும் பயன்படக்கூடியது. இந்த மாபெரும் சக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்காக நமது விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள். யுரேனியம் என்ற அபூர்வ உலோகத்திலிருந்து அணுசக்தி தயாரிக்கப்படுகிறது. கேரளாவில், ஆல்வேயில் உள்ள அபூர்வ மணல் தொழிற்சாலையில் மண்ணிலிருந்து யுரேனியம் பிரித்து எடுக்கப் படுகிறது. பம்பாயிலுள்ள அணுசக்தி நிலையத்துக்கு அங்கிருந்து யுரேனியம் அனுப்பப்படுகிறது.

இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டிற்குக் கப்பல் கட்டும் தொழிலும் விமானம் கட்டும் தொழிலும் ஜீவாதாரமானவை. இந்த இரண்டு தொழில்களும் இந்தியாவில் நல்ல முறையில்



ஆரம்பமாகியுள்ளன. தற்போது விசாகப்பட்டினத்தில் கப்பல் கட்டும் தளம் ஒன்று உள்ளது. 1952-ல் இந்தத் தளத்தின் உடைமையில் பெரும் பகுதியை இந்திய சர்க்கார் மேற்கொண்டது. பின்னர் தளம் நவீன முறையில் விஸ்தரிக்கப் பட்டது.

இப்போது அங்கு நவீன ரகக் கப்பல்கள் நிர்மாணிக்கப் படுகின்றன. தவிர, இன்னும் ஒரு கப்பல் தளத்தை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. பெங்களூரிலுள்ள ஹிந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் எச். டி-2 ரக விமானங்கள் கட்டப் படுகின்றன. விமானிகளுக்குப் பயிற்சி யளிப்பதற்கு மிகப் பொருத்தமான விமானங்கள் இவை. இவற்றின் சிறப்பு காரணமாக இந்த விமானங்களை அந்நிய நாடுகள் கூட வாங்க விரும்புகின்றன.



ஹிந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் ரயில் பெட்டிகளும் கட்டப்படுகின்றன. நவீன எஃகு ரயில் பெட்டிகளை உற்பத்திசெய்வதற்காகச் சென்னை, பெரம்பூரில் ஒரு பிரம்மாண்டமான தொழிற்சாலை சமீபத்தில் அமைக்கப்பட்டது. மீட்டர் கேஜ் பாதைகளுக்கு ஏற்ற சிறிய ரயில் பெட்டிகளைத் தயாரிப்பதற்காக இன்னொரு தொழிற்சாலையை நிறுவப்போகிறோம்.

ரயில் பெட்டிகளை இழுத்துச் செல்வதற்கு என்ஜின்கள் வேண்டும். நமது தேவைக்குப் போதுமான என்ஜின்கள் நாட்டில் இல்லை. முன்பெல்லாம் பிரிட்டன் முதலிய வெளி நாடுகளிலிருந்தே ரயில் என்ஜின்கள் இறக்குமதி செய்யப் பட்டன. இந் நாட்டிலேயே இவற்றை நிர்மாணிப்பதற்காக 1950-ல் ஒரு பிரம்மாண்டத் தொழிற்சாலையை ஸ்தாபித்தோம். சித்தரஞ்சனில் இருக்கும் இந்தத் தொழிற்சாலையைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். மற்றும் டாட்டா என்ஜினிரிங்-லோக்கமோட்டிவ் கம்பெனியும் ரயில் என்ஜின்களை நிர்மாணித்து வருகிறது.

இயந்திரக் கருவிகள் இல்லாமல் நமது தொழில் திட்டங்கள் நிறைவேற முடியாது. இக் கருவிகளைத் தயாரிப்பதற்காக இரண்டு தொழிற்சாலைகளை முன்பே அமைத்திருக்கிறோம். இவற்றுள் ஒன்று பெங்களூர் அருகேயுள்ள ஜலஹள்ளியில் இருக்கிறது. பம்பாய் ராஜ்யத்தைச் சேர்ந்த அம்பர்நாத்தில் இன்னொன்று இருக்கிறது யுத்த தளவாடத் தொழில்களுக்கு வேண்டிய கருவிகளை அம்பர்நாத் ஆலை தயாரிக்கிறது.

இரண்டாவது திட்ட காலத்தில் போபால் அருகே ஒரு முக்கியமான தொழிற்சாலை நிறுவப்படும். டர்பைன், ஜெனரேட்டர் போன்ற கனரக மின்சார சாதனங்களை அத் தொழிற்சாலை தயாரிக்கும். வயர்லஸ் சாதனங்களை உற்பத்தி செய்வதற்காக பெங்களூரில் ஏற்கெனவே ஒரு தொழிற்சாலை அமைக்கப் பட்டிருக்கிறது.



சென்ற சில ஆண்டுகளில் மேலும் பல தொழிற்சாலைகளை அரசாங்கம் நிறுவியிருக்கிறது. உதாரணமாக டெலிபோன், டெலிபோன் கம்பிகள், விஞ்ஞானக் கருவிகள், டி. டி. ட்டி., பென்ஸிலின் முதலிய பொருள்கள் அரசாங்கத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப் படுகின்றன. இரண்டாவது திட்டகாலத்தில் இந்தத் தொழிற்சாலைகள் விஸ்தரிக்கப்பட்டு அவற்றின் உற்பத்தி அதிகரிக்கும். இன்னொரு டி. டி. ட்டி. தொழிற்சாலை புதிதாக ஏற்படுத்தப்படும்.

தொழில்களை வளர்ப்பதற்காக அரசாங்கம் அரும்பாடு பட்டு வருவதை இவை யெல்லாம் காட்டுகின்றன. சில வகைத் தொழில்களில் அரசாங்கம் விசேஷ சிரத்தை கொண்டிருக்கிறது என்பதையும் மேலே உள்ள தகவல்கள் காட்டுகின்றன. அதாவது இரும்பு, எஃகு, கப்பல், விமானம், ரயில் என்ஜின், இயந்திரக் கருவிகள், கனரக மின்சார இயந்திரங்கள், அணு சக்தி முதலிய தொழில்களில் சர்க்கார் அதிகக் கவனம் செலுத்துகிறது. இத்தகைய தொழில்கள் மிகமிக முக்கியமானவை. நாட்டின் தொழில் வளத்துக்கு ஆதாரமாக, அஸ்திவாரமாக உள்ளவை இவை. அதனால் இவற்றை, 'ஆதாரத் தொழில்கள்' என்று கூறலாம். ஆதாரத் தொழில்களைப் பேணி வளர்ப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

## தனியார் தொழில்கள்

ஆதாரத் தொழில்கள் மிகவும் முக்கியமானவைதாம். ஆயினும் அவை மாத்திரம் இருந்தால் போதா. நமது அன்



ருட உபயோகத்துக்கு எத்தனையோ பொருள்கள் தேவைப் படுகின்றன. அவற்றை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற் சாலைகளையும் வளர்க்க வேண்டும். இவ்விதம் பல்வேறு

தொழில்களை வளர்ப்பதற்கு அரசாங்க முயற்சி மாத்திரம் போதாது. தனிப்பட்டவர்களும் இந்தப் பணியில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். பெரிய, நடுத்தர, சிறிய தொழில்கள் பலவற்றை நிறுவி மக்களுக்குத் தனிப்பட்ட தொழிலதிபர்கள் சேவை செய்யமுடியும்.

முதலாவது திட்ட காலத்தில் தனியார்களின் தொழில்கள் சில பெரிதும் முன்னேறின. உதாரணமாக நாம் எதிர்பார்த்ததை விடவும் அதிகமான துணியை மில்கள் உற்பத்தி செய்தன. 1950-51-ல் சராசரி ஒருவருக்கு 9 கெஜம் துணி வீதமே உற்பத்தி ஆயிற்று. முதல் திட்ட இறுதியில் இந்த அளவு 15 கெஜமாக அதிகரித்து விட்டது. இவ்விதமே சர்க்கரை, சிமின்ட், காகிதம், சைக்கிள் முதலியவற்றின் உற்பத்தியும் பெருகியது. இரண்டாவது திட்ட காலத்தில் தொழில் உற்பத்திகள் முன்னைவிடவும் அதிகமாகப் பெருகவேண்டும். குறிப்பாக சிமிண்ட், இயந்திரங்கள், அலுமினியம், கந்தக அமிலம், இரசாயனப் பொருட்கள் முதலியவற்றை நமது தொழிலதிபர்கள் அதிகமாகத் தயாரிக்கவேண்டும். நாட்டைத் தொழில்மயமாக்குவதற்கு இப்பண்டங்கள் மிகவும் அவசியமானவை.

மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்போது அவர்களின் தேவைகளும் அதிகரிக்கும். ஜவுளி, மருந்துகள், சைக்கிள்கள், ரேடியோ செட்டுகள், தையல் இயந்திரங்கள் முதலிய பல்வேறு பண்டங்களின் தேவை மேன்மேலும் பெருகும். வசதியுடன் வாழ்வதற்கு உதவக்கூடிய இப்பண்டங்களின் உற்பத்தியும் மேன்மேலும் அதிகரிக்க வேண்டும்.

## குடிசைத் தொழில்களும் சிறு தொழில்களும்

தொழில் துறையில் ஒரு விசேஷப் பிரச்னையை நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. குடிசைத் தொழில்களும் சிறு தொழில்களும் நீடித்து இருப்பதற்கு எவ்வாறு உதவுவது என்பதே அப்பிரச்னை. நாம் உதவி செய்யாவிட்டால் அவை சீக்கிரமே நசித்து மாண்டுவிடும். ஏனெனில், சிறு தொழில்கள் தயாரிக்கும் பண்டங்களைப் பெரிய இயந்திர ஆலைகள் மலிவாக உற்பத்தி செய்ய முடியும். இந்த ஆலைகளின் போட்டியைச் சிறு தொழில்களால் எதிர்த்து நிற்க முடியாது. தவிர, உற்

பத்தியாகும் பண்டங்களை விற்பனை செய்வதற்குப் பெரிய ஆலைகளுக்கு உள்ள வசதிகள் சிறிய ஆலைகளுக்கு இல்லை. சிறிய தொழில்களுக்கு ஏன் உதவ வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். பெரிய ஆலைகளின் பண்டங்களை மலிவான விலைக்கு நாம் வாங்கிக் கொள்ளலாமே என்றும் கூறக்கூடும்.

இது புத்திசாலித்தனமான கருத்துத்தான். ஆனால் வேறொரு முக்கிய விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. வேலை வசதி என்ற விஷயமே அது. குடிசைத் தொழில்களும் சிறு தொழில்களும் லட்சோப லட்சம் பேருக்கு வேலையும் பிழைப்பும் தருகின்றன. இவர்களில் பலர் கிராம வாசிகள். நாட்டை முன்னேற்றுகிறோம் என்று சொல்லிக் கொண்டு இவர்களின் பிழைப்பைக் கெடுப்பது கொடூரமாகும். அதனால்தான் சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் வலுப்படுத்தி வளர்த்து வருகிறோம். நாட்டை முன்னேற்றுவதில் இத் தொழில்களுக்குப் பங்களிக்க முயன்று வருகிறோம்.

பெரிய ஆலைகளின் போட்டியிலிருந்து குடிசைத் தொழில்களும் சிறு தொழில்களும் பாதுகாக்கப்படுகின்றன. சிறு தொழில்கள் தயாரிக்கும் பண்டங்களைப் பெரிய ஆலைகளும் உற்பத்தி செய்தால் அந்தப் பெரிய ஆலைகளுக்கு விசேஷ வரி விதிக்கப் படுகிறது. உதாரணமாக, கைத்தறி ஜவுளியைப் பாதுகாப்பதற்காக மில் ஜவுளிக்கு இத்தகைய வரி போடப் படுகிறது. தவிர, கிராமக் கைத்தொழில் வினைஞர்களுக்கு நவீன முறையில் பயிற்சி யளிக்கப் படுகிறது. ஜனங்கள் விரும்பி வாங்கக் கூடிய சிறந்த பண்டங்களை அவர்கள் உற்பத்தி செய்வதற்கு இந்தப் பயிற்சி உதவும். கைத்தொழில் வினைஞர்களைக் கூட்டுறவு சங்கங்களில் சேர்ப்பதற்கும் ஏற்பாடு செய்யப் படுகிறது. மூலப் பொருள்களை மலிவாக வாங்கவும், உற்பத்தியான பண்டங்களை லாபகரமாக விற்கவும் கூட்டுறவு சங்கங்கள் ஏற்றவை. குடிசைத் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் இன்னொரு விதத்திலும் அரசாங்கம் உதவுகிறது. அதாவது, அவை தயாரிக்கும் பண்டங்களைச் சர்க்கார் தனது உபயோகத்துக்குக் கூடுமானவரை வாங்கிக்கொள்கிறது.

குடிசைத் தொழில்களிலும் சிறு தொழில்களிலும் பல

வகை உண்டு. இவற்றை யெல்லாம் சரிவரப் பராமரித்து வளர்ப்பதற்காக ஆறு அகில இந்திய ஸ்தாபனங்கள் அமைக்கப் பட்டுள்ளன. உதாரணமாக 'கதர்-கிராமத் தொழில்கள் போர்டு' என்ற ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. கதர், கைக்குத்தல் அரிசி, வெல்லம், சோப்பு, தீக்குச்சி, கையினால் செய்யும் காகிதம் முதலிய கைத்தொழில்களுக்கு இந்த போர்டு ஊக்கமளித்து வருகிறது அம்பர் சர்க்கா என்ற புதிய இராட்டினம்



ஒன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. சாதாரண இராட்டினத்தை விட அதிகமான நூலை அம்பர் சர்க்கா நூற்கிறது. இரண்டாவது திட்ட காலத்தில் அம்பர் சர்க்கா மூலம் சுமார் 50 லட்சம் ஜனங்களுக்கு வேலை கிடைக்கும். பம்பாய், சென்னை, டில்லி என்ற மூன்று நகரங்களின் மொத்த ஜனத்தொகைக்கு ஏறக்குறையச் சமமானது இது.

கைத்தறி நெசவாளர்களுக்கு வேண்டிய உதவிகளைக் 'கைத்தறி போர்டு' அளித்து வருகிறது. இந்த உதவிகள் காரணமாக முதல் திட்டத்திற்கு முன்பு உற்பத்தியானதைப் போல் இருமடங்கு கைத்தறி ஜவுளி 1955-56-ல் தயாரிக்கப் பட்டது. இரண்டாவது திட்ட காலத்தில் அதிகப்படியாகத் தேவைப்படும் ஜவுளியில் பெரும் பகுதி கைத்தறிகளிலேயே உற்பத்தி செய்யப்படும். இதனால் ஏராளமான நெசவாளர்களுக்குப் பிழைப்புக் கிடைக்கும்.

மிகச் சமீப காலம் வரை கிராமாந்தரக் கைநுட்பத் தொழில்கள் க்ஷீணித்துக் கொண்டிருந்தன. இப்போது 'கை நுட்பத் தொழில் போர்டின்' முயற்சிகள் காரணமாக அந்தத் தொழில்கள் புத்துயிர் பெற்று வருகின்றன. கை நுட்பத் தொழிலாளர்களுக்குப் புதிய தொழில் முறைகள் போதிக்கப் படுகின்றன; புதுமாதிரிக் கருவிகளும் வழங்கப் படுகின்றன. அவர்கள் உற்பத்திசெய்யும்பொம்மைகள், உலோகப் பொருள்கள், வளையல்கள், கம்பளங்கள் முதலியவற்றைக் கூட்டுறவு முறையில் விற்பதற்கு ஏற்பாடு செய்யப் படுகிறது. இவ்வாறே பட்டுத் தொழிலுக்கு ஒரு போர்டும், கயிற்றுத் தொழிலுக்கு மற்ருெரு போர்டும் உதவி செய்கின்றன.

'சிறு தொழில்கள் போர்டு' என்ற ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது. விளையாட்டுச் சாதனங்கள், ஜோடுகள், பூட்டுக்கள், சைக்கிளின் பாகங்கள், ரேடியோவின் உறுப்புக்கள் போன்ற பண்டங்களைத் தயாரிக்கும் சிறு தொழில்களுக்கு இந்த போர்டு உதவி யளிக்கிறது. குடிசைத் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் இடையே வித்தியாசம் உண்டு. சிறிய கருவிகளின் உதவியுடன், கையிஞல் தயாரிக்கப்படுபவை குடிசைத்தொழில் பண்டங்கள். சிறு தொழில்களோ இயந்திரங்கள், விசை, நவீன செய்-முறைகள் ஆகியவற்றை உபயோகிக்கின்றன. சிறு தொழிற்சாலை ஒன்றில் 50-க்குக் குறைவான சிப்பந்திகள் வேலை பார்க்கிருர்கள். டவுன்களிலோ, டவுன்களின் அருகாமையிலோ சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. சிறு தொழில்களுக்கு உதவி யளிக்கவும் ஆலோசனை கூறவும் நான்கு பிராந்தியக் கழகங்களை போர்டு அமைத்திருக்கிறது. அடுத்த சில வருஷங்களில் மேலும் 16 கழகங்கள் அமைக்கப் படும். சிறு தொழில்காரர்கள் மூலப்பொருள்களை வாங்கவும் உற்பத்தியான பண்டங்களை விற்கவும் 'தேசிய சிறு தொழில் கார்ப்பரேஷன்' என்ற ஸ்தாபனம் உதவி யளிக்கிறது.

குடிசைத் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் உதவி யளிப்பதன் காரணமாகப் பெரிய தொழில்களை அரசாங்கம் அலட்சியம் செய்வதாக நீங்கள் கருத வேண்டாம். நமது தொழில் அரங்கத்தில் சிறு உற்பத்தியாளர்கள், பெரிய உற்பத்தியாளர்கள், சர்க்கார் என்ற மூன்று பிரிவினருக்கும் உரிய

ஸ்தானம் உண்டு. தொழில்களை வளர்ப்பதில் ஒவ்வொரு பிரிவினருக்கும் முக்கிய பங்கு உண்டு.

## விஞ்ஞானமும் தொழில்களும்

18-வது நூற்றுண்டில் ஐரோப்பாவில் இயந்திர யுகம் பிறந்தது முதல் தொழில்களுக்கு விஞ்ஞானம் உற்ற நண்பனுக உதவி வருகிறது. புதிய கண்டுபிடிப்புகளையும் வழி முறைகளையும் விஞ்ஞானம் தந்திரா விட்டால் தொழில் முன்னேற்றமே ஏற்பட்டிருக்காது.

நமது முதலாவது திட்டத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப் பட்டன. பதினென்கு தேசிய ஆராய்ச்சி சாலைகள் நிறுவப் பட்டன. இவை நடத்தும் பரிசோதனைகள் நம் தொழில்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. இவை தவிர வேறு பல ஆராய்ச்சிக் கழகங்களும் நிலையங்களும் நாட்டில் உள்ளன. பெங்களூரில் உள்ள இந்திய விஞ்ஞானக் கழகமும் பம்பாயில் உள்ள டாட்டா மூலாதார ஆராய்ச்சிக் கழகமும் இவற்றுக்கு உதாரணங்கள். மற்றும் அணுசக்தி ஆராய்ச்சிக் கழகம் ஒன்று இருப்பதை முன்பே குறிப்பிட்டோம்.

இரண்டாவது திட்டத்தில் தொழில்களைப் பெரிய அளவில் வளர்க்கப் போகிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். அதனுல் முன்னை விடவும் அதிகமாக விஞ்ஞானத்தின் உதவி தேவைப்படும். இதற்கு வசதியாக மேலும் பல ஆராய்ச்சிக் கழகங்களை ஏற்படுத்தப் போகிறோம்.

கிராமவாசிகளுக்கு விஞ்ஞான அறிவைப் போதிப்பதற்காக ஒரு திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது. அதன்படி 'விஞ்ஞான மந்திர்கள்' என்ற நிலையங்கள் நிறுவப்படும். அன்றுட வாழ்க்கையுடன் சம்பந்தம் உள்ள விஞ்ஞான விஷயங்களை மக்களுக்கு இந் நிலையங்கள் போதிக்கும். முதலில் சுமார் நூறு விஞ்ஞான மந்திர்கள் ஏற்படுத்தப்படும்.

நமது நாணய முறையும், நிறுத்தல், நீட்டல் போன்ற அளவைகளும் மாற்றப்படும் என்பது மற்ருெரு முக்கிய விஷயமாகும். நமது அளவைகளில் சில பிரிட்டிஷ் முறையைச் சேர்ந்தவை; வேறு சில புராதன இந்திய முறைகளைச் சேர்ந்தவை.

பலதரப்பட்ட அளவைகள் இருப்பதன் காரணமாகக் குழப்பம் ஏற்படுகிறது. இதனால் தொழில்களுக்கும் வர்த்தகத்துக்கும் பெருத்த சங்கடம் விளைகிறது. 1,100 கிராமங்களில் விசாரித்துப் பார்த்ததில் 143 வகை அளவைகள் அவற்றில் இருப்பது தெரியவந்தது! 'சேர்' என்ற சாதாரண நிறுத்தல்




அளவை கூட இடத்துக்கு இடம் மாறுபடுகிறது. சேரின் அளவு 8 தோலா முதல் 160 தோலா வரை பலவிதமாக இருக்கிறது. மணங்கில் நூற்றுக்கு மேற்பட்ட வகைகள் உள்ளன. இந்தக் குழப்பத்தை நீக்குவதற்காக நாடு முழுதிலும் ஒரேவித அளவை முறையைக் கையாளத் தீர்மானித்திருக்கிறோம். இந்த அளவை முறைக்கு 'மெட்ரிக் முறை' என்று பெயர். 'மீட்டர்' என்ற பிரெஞ்சு அளவையை ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ள முறை இது. 39.37 அங்குலத்துக்குச் சமமானது ஒரு மீட்டர். மெட்ரிக் முறையில் இரண்டு முக்கிய அனுகூலங்கள் உண்டு. முதலாவதாக, அது பெரும்பாலான நாடுகளில் கையாளப்படுகிறது. இரண்டாவதாக, அது மிகவும் இலகுவான முறை. 10-ன் மடங்குகளை ஆதாரமாகக் கொண்டிருப்பதால் அதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். இம்முறையைப் பள்ளிக் குழந்தைகள் பெரிதும் விரும்புவர். ஏனெனில்

இதன் மூலம் அவர்களது கணிதப் பாடம் முன்னைவிட இலகு வாகிவிடும்!

அளவைகளை இவ்வாறு மாற்றுவதற்கு முன்னால் நாண யங்களைத் தசாம்ச முறைக்கு மாற்ற ஏற்பாடு செய்யப் பட்டது. 1957 ஏப்ரல், 1-ந் தேதி முதல் தசாம்ச நாணய முறை அமலில் வந்திருக்கிறது. தசாம்ச முறையில் ஆதார நாண யத்தின் பெயர் 'நயா பைசா'. 100 நயா பைசாக்களைக் கொண்டது ஒரு ரூபாய். நாணய முறையைப் போலவே அளவைகளும் படிப்படியாகப் புது முறைக்கு மாற்றப்படும்.

அத்தியாயம் 8

# புதையல் பொக்கிஷங்கள்

**தொ**ழில்களை வளர்ப்பது சம்பந்தமாக முந்திய அத்தியா யத்தில் பார்த்தோம். தொழில்கள் நடப்பதற்கு அவசியமான மூலப்பொருள்கள் சம்பந்தமாக இப்போது கவனிப்போம். களிமண் இல்லாமல் பானை வனைய முடியாது. கரும்பு இல்லை யேல் வெல்லம் தயாரிக்க முடியாது. பருத்தி இல்லாவிடில் துணி நெய்ய முடியாது. ஆகவே இந்த மூலப்பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்தால்தான் தொழில்களை வளர்க்க முடியும். கரும்பு, பருத்தி போன்ற மூலப்பொருள்களைப் பூமியின் மீது பயிரிடுகிறோம். ஆனால் வேறு சில மூலப்பொருள் களை இவ்வாறு பயிரிட முடியாது. அவற்றைப் பூமிக்கு அடியில்தான் தேட வேண்டும்.

உதாரணமாக எஃகுத் தொழிலை எடுத்துக் கொள்வோம். இரும்புத் தாதுவிலிருந்து எஃகு தயாரிக்கப் படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். பூமிக்கு அடியிலிருந்து இரும்புத் தாது தோண்டி யெடுக்கப் படுகிறது. மற்றும் நிலக்கரி, சுண் ணாம்புக்கல் முதலிய பொருள்களும் எஃகு தயாரிப்பதற்குத் தேவைப் படுகின்றன. இதே போல் அலுமினியத் தொழி லுக்கு பாக்சைட் அவசியம்; சிமின்ட் தொழிலுக்கு ஜிப்ஸம்

வேண்டும். இரசாயன உரம் தயாரிப்பதற்கும் ஜிப்ஸம் உப யோகிக்கப் படுகிறது. இந்த மூலப்பொருள்கள் பூமிக்கு அடியி லிருந்து கிடைப்பவையே. இன்னும் மாங்கனீஸ், செம்பு, ஈயம், துத்தநாகம், அப்ரகம் முதலியவையும் சுரங்கங்களிலிருந்து கிடைக்கின்றன. இவை எல்லாம் தொழில்களுக்குப் பயன் படுகின்றன.



பெட்ரோலியம் என்ற கனி எண்ணெய் பற்றி முன்பு பிரஸ்தாபித்தோம். இந்த எண்ணெயும் பூமியிலிருந்தே கிடைக் கிறது. பெரிய தொழிற்சாலைகள் நடப்பதற்குப் பெட்ரோலி யம் அத்தியாவசியமானது. நமக்குத் தேவைப்படும் இந்தக் கனி எண்ணெயில் பெரும் பகுதியை அந்நிய நாட்டினரிட மிருந்தே வாங்கி வருகிறோம். இந்த நிலைமை மாறவேண்டும். நம் நாட்டில் இருக்கக்கூடிய எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டு பிடிப்பது அவசியம்.

கனிப் பொருள்கள் இருக்கும் இடம் தெரிந்தால்தான் அவற்றை வெட்டி யெடுக்க முடியும். ஒருசில சமயங்களில் நிலக்கரி அல்லது இரும்பு இருக்கும் இடம் சந்தர்ப்பவசமாகப்

புலனுகிறது. ஆனால் இத்தகைய அதிர்ஷ்டம் எப்போதும் நிகழ்வதில்லை. நமது கண்களால் பூமிக்குள் ஊடுருவிப் பார்க்கவும் முடியாது. பிறகு கனிகளை எப்படிக் கண்டுபிடிப்பது?

இந்தச் சமயத்தில் பூகர்ப்ப சாஸ்திரம் என்ற விஞ்ஞானம் நமக்கு உதவி செய்ய முன்வருகிறது. பூமியில் அடுக்கடுக்காகப் படிந்துள்ள பாறைகளின் தன்மையைக்கொண்டு ஒரு இடத்தில் ஒரு கனிப் பொருள் இருக்கக் கூடும் என்று பூகர்ப்ப விஞ்ஞானி தீர்மானிக்கிறார். பின்னர் அந்த இடத்தில் துளைகள் போட்டு அந்தக் கனி இருக்கிறதா, எவ்வளவு ஆழத்தில் இருக்கிறது, எவ்வளவு பரப்பில் வியாபித்திருக்கிறது என்ற விஷயங்களை அறியலாம். இவ்வாறு சோதனை செய்து கண்டுபிடித்த பிறகே பெரிய அளவில் சுரங்கம் தோண்டுவது பற்றி முடிவு செய்கிறோம்.



இந்தியாவில் ஏராளமான கனிப் பொருள்கள் புதைந்து கிடக்கின்றன. ஆனால் இந்தப் புதையல்களைத் தோண்டியெடுப்பதற்குச் சமீப காலம் வரை தகுந்த ஏற்பாடுகள் செய்யப் படவில்லை. இப்போதுதான் அவ்விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தப் படுகிறது. உதாரணமாக, முதல் திட்ட

காலத்தை விட 60 சதவிகிதம் அதிகமான நிலக்கரியையும் சுமார் மூன்று மடங்கு அதிகமான இரும்புத் தாதுவையும் 1960-61-க்குள் தோண்டி யெடுக்கத் திட்டமிட்டிருக்கிறோம். மற்றும் செம்பு, மாங்கனிஸ், குரோமைட், ஜிப்ஸம், ஈயம், துத்தநாகம், வெள்ளீயம் முதலிய கனிகளின் இருப்பிடங்களை அறிவதற்குப் புதிய சோதனைகள் நடத்தப்படும்.

எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பது மிக முக்கிய மான காரியமாகும். மேற்கு வங்காளம், ராஜஸ்தான், காம்பே பிரதேசங்களில் கனி எண்ணெய் கிடைக்கக் கூடுமென்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். எண்ணெய் வளம் உள்ள நாடுகளுக்கு ஏராளமான செல்வம் கிடைக்கிறது. சவூதி அரேபியா, இராக், ஈரான் முதலிய அண்டை நாடுகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். நம் நாட்டிலும் பெரிய எண்ணெய்ச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப் பட்டால் ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பேருதவியாக இருக்கும். கனி எண்ணெயைச் சுத்திகரிப்பதற்காகப் பம்பாய் அருகில் ஏற்கெனவே இருபெரிய ஆலைகள் நிறுவப் பட்டிருக்கின்றன. விசாகப்பட்டினத்தில் மற்றொரு எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப் பட்டிருக்கிறது.

அத்தியாயம் 9

# நாட்டின் நரம்புகள்

பல்வேறு பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதே நமது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம். உற்பத்தி பெருகினால்தான் நாடு உயரும். மேன்மேலும் மூலப்பொருள்களைத் தொழிற்சாலைகளில் கொண்டுசேர்த்தால் தான் உற்பத்தியை அதிகரிக்க முடியும். உற்பத்தியான பண்டங்களை விற்பதற்காகப் பல்வேறு இடங்களுக்குக் கொண்டு சேர்ப்பதும் அவசியம். அதாவது உற்பத்தி பெருகினால் வியா

பாரம் வளரும். வியாபாரம் காரணமாகவும் வேறு அலுவல்கள் காரணமாகவும் அதிகமான பேர் பிரயாணம் செய்ய நேரிடும். சுருக்கமாகக் கூறினால், உற்பத்தி பெருகப் பெருகப் போக்குவரத்து சாதனங்களின் தேவையும் அதிகரிக்கும். ரயில்வேக்கள், ரஸ்தாக்கள், கப்பல்கள், விமானங்கள் போன்ற எல்லாவிதப் போக்குவரத்து வசதிகளையும் அதிகரிக்கவேண்டியிருக்கும்.

## ரயில்வேக்கள்

நமது போக்குவரத்து சாதனங்களில் மிக முக்கியமானது ரயில்வேதான். ரயில் வசதி நமக்கு மிகவும் பழகிப்போய்விட்டதால் அதன் முக்கியத்துவத்தை நாம் சரிவர உணர்வதில்லை. தினந்தோறும் நூற்றுக்கணக்கான ரயில்கள் ஓடி ஓடி நாட்டுக்கு உழைக்கின்றன. அவை ஓடாமல் நின்றுவிட்டால் என்ன ஆகும் தெரியுமா? பெரிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்க மாட்டா; ஆலை இயந்திரங்கள் இயங்காமல் நின்றுவிடும். வர்த்தகம் சீர்குலைந்து விடும். நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் கரி, விறகு முதலியவையும் கிடைக்க மாட்டா.



ரயில்கள் இல்லாவிட்டால் ரஸ்தா மூலமாகப் பண்டங்களைக் கொண்டு வரலாமே என்று நீங்கள் கேட்கலாம். ரஸ்தாக்கள் நமக்கு நன்கு பயன்படுவது உண்மையே. ஆனால் ரயில்வேக்கள் செய்யும் வேலையில் ஒரு அற்பப் பகுதியைத்தான் ரஸ்தாக்களால் செய்ய முடியும். நாட்டின் முன்னேற்றத்திற்கு ஜீவாதாரமானவை ரயில்வேக்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரியது நமது ரயில்வே. நம் நாட்டில் 35,000 மைல் நீள ரயில் பாதை இருக்கிறது. பூமியின் மைய பாகச் சுற்றளவைப் போல் இது ஒன்றரை மடங்கு பெரிது. எனினும், இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டிற்கு இவ்வளவு ரயில் பாதைகூடப் போதாதுதான்.

நமது ரயில்வேக்களைச் சில கஷ்டங்கள் வருத்தி வருகின்றன. ஒரு ரயில் பெட்டியோ அல்லது என்ஜினோ நிரந்தரமாக ஓடக்கூடியது அல்ல. சில வருஷங்களுக்குப் பிறகு அதன் பாகங்கள் தேய்ந்து விடுகின்றன. தேய்ந்தவைகளுக்குப் பதில் புதிய உறுப்புக்களைப் பொருத்தவேண்டியிருக்கிறது. மேலும் சில வருஷங்களுக்குப் பிறகு அந்த என்ஜினோ, பெட்டியோ முற்றிலும் உதவாக்கரையாகிவிடுகிறது. அதற்குப் பதில் புதிய பெட்டியையோ என்ஜினையோ உபயோகிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இரண்டாவது மஹா யுத்தத்தின் போது நமக்குப் புதிய என்ஜின்களும் ரயில் பெட்டிகளும் கிடைக்கவில்லை. அதனால் நைந்து தேய்ந்த வாகனங்களைக் கொண்டே காலந்தள்ள வேண்டியிருந்தது. யுத்தம் முடிந்த பிறகும் விமோசனம் பிறக்கவில்லை; புதிய கஷ்டமே ஏற்பட்டது, அதாவது, நாடு பிரிவினை செய்யப்பட்டதன் விளைவாக ரயில்வே சாதனங்களில் ஒரு பகுதியை நாம் இழக்க நேரிட்டது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்ட போது நமது ரயில்வேக்கள் இவ்வாறு மோசமான நிலைமையில் இருந்தன. இந்த நிலைமையில் அவை நாட்டின் முன்னேற்றத்திற்காக எவ்வாறு உழைக்க முடியும்? முடவனைப் பந்தயத்தில் ஓடச் சொல்ல முடியுமா? திட்டம் வகுத்தவர்கள் இதை உணர்ந்திருந்தார்கள். ரயில்வேக்களுக்கு முதலில் உதவி செய்தால்தான் அவை நாட்டிற்கு உதவ முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் சாத்தியமானவரை அதிகமான நிதியை ரயில்வேக்களுக்காக அவர்கள் ஒதுக்கி வைத்தார்கள். ரஸ்தாக்கள், கப்பல்கள் முதலிய மற்ற எல்லாப் போக்குவரத்து சாதனங்களுக்கும் கிடைத்த மொத்த நிதியைவிட அதிகமான நிதி ரயில்வேக்களுக்குக் கிடைத்தது.

ரயில்வே அபிவிருத்திக்காக அந்த நிதி நன்கு பயன்படுத்தப்பட்டது. ஆயினும் ரயில்வேக்களின் கஷ்டங்கள் அனைத்

தையும் தீர்க்க முடியவில்லை. புதிதாக உற்பத்தியாகும் என்ஜின்கள், பெட்டிகள், வாகன்கள் ஆகியவற்றின் தொகைக்குச் சமமான பழைய வாகனங்களை அவ்வப்போது கழிக்க வேண்டியிருக்கிறது. முதலாவது திட்ட காலத்தில் எல்லாப் பழைய வாகனங்களையும் தளவாடங்களையும் மாற்ற முடியவில்லை. நைந்து போன ரயில் பாதைகளை புதுப்பிக்கும் வேலையும் முற்றுப் பெறவில்லை.

முதல் திட்ட காலத்தில் ரயில்வேக்களின் நிலைமை அபிவிருத்தி யடைந்த போதிலும் அவை பூரண ஆரோக்கியத்தைப் பெறவில்லை. இந்த நிலைமையில் இரண்டாவது திட்டம் வந்திருக்கிறது. ஆரோக்கியமாய் இல்லாத ஒருவரை ஓய்வு எடுக்கும்படி டாக்டர் சொல்கிறார். ஆரோக்கியமற்ற ரயில்வேக்களையும் அவ்வாறு ஓய்வு எடுக்கச் சொல்லலாமா? அது சாத்தியமல்ல. ஓய்வு எடுப்பதற்குப் பதில் அவை முன்னை விட அதிகப் பொறுப்பைத் தாங்க வேண்டியிருக்கும்! இரண்டாவது திட்ட காலத்தில் தொழில், விவசாயப் பண்டங்களின் உற்பத்தி அதிகரிக்கும். முன்னை விட அதிகமான தானியங்கள், நிலக்கரி, இரும்பு, சிமின்ட், இரசாயன உரங்கள், இயந்திரங்கள் முதலிய பல்வேறு பண்டங்களை ரயில்வேக்கள் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும். மொத்தத்தில் முதல் திட்ட காலத்தைவிட அரை மடங்கு அதிகமான பாரத்தை அவை தாங்கிச் செல்ல வேண்டும்.

இப்போதைய பலவீனமான நிலைமையில் ரயில்வேக்களால் இவ்வளவு பெரிய பாரத்தைத் தாங்க முடியாது. அவற்றுக்குச் சரியானபடி தெம்பு ஊட்டினால்தான் அவை அதிகமாக உழைக்க முடியும். இரண்டாவது திட்டத்துக்கு மொத்தம் ரூபாய் 4,800 கோடி செலவிடப் போகிறோம் அல்லவா? ரயில்வேக்களின் அபிவிருத்திக்காக மாத்திரம் இதில் 19 சதவிகிதம் செலவிடப்படும்.

இவ்வளவு பெரிய தொகையை எவ்வாறு பயன்படுத்துவது? முதலாவதாக, அதிகமான என்ஜின்களும் ரயில் பெட்டிகளும் தேவைப் படுகின்றன. இவற்றை உற்பத்தி செய்யும் சித்தரஞ்சன், பெரம்பூர் தொழிற்சாலைகளை விஸ்தரிப்பதற்குப் பணம் செலவிடப்படும். தவிர, மீட்டர் கேஜ் பெட்டிகளைத்

தயாரிப்பதற்காக ஒரு புதிய தொழிற்சாலை நிறுவப்படும் என்று முன்பே கூறியிருக்கிறோம்.

இப்போதை விட அதிகமான என்ஜின்களும், பெட்டிகளும், வாகன்களும் ஓடுமாதலால் அவற்றைப் பராமரிப்பதற்கும்போதிய வசதிகளைச் செய்யவேண்டும். இதற்காக ரயில்வே 'ஓர்க்ஷாப்புகளை' விஸ்தரித்து அவற்றில் புதிய தளவாடங்களை நிறுவப் போகிறோம். ஆறு புதிய ஓர்க்ஷாப்புகள் வேறு ஏற்படுத்தப்படும். தொழில், வர்த்தகத் துறைகளுக்கு உதவியாகச் சில நூறு மைல்களுக்குப் புதிய ரயில் பாதைகள் போடப்படும். நைந்துபோன பழைய பாதைகள் பல புதுப்பிக்கப்படும். ரயில்வே பாலங்கள் மராமத்துச் செய்யப்படும்.

இவ்விதம் பல்வேறு வழிகளில் நமது ரயில்வேக்கள் பலப்படுத்தப்படும். அதன் விளைவாக தேசியத் திட்டத்தில் தங்களுக்குரிய முக்கிய பொறுப்பை ரயில்வேக்கள் நிறைவேற்ற முடியும்.

## ரஸ்தாக்கள்

பெரிதும் முன்னேறிய நாடுகளில் கூட எல்லா ஊர்களுக்கும் ரயில் வசதியில்லை. ரயில்கள் போகாத, அல்லது போக முடியாத இடங்களுக்கு ரஸ்தாக்கள் உதவுகின்றன. நமது நாட்டில் நல்ல ரஸ்தாக்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. ரயில்வேக்களின் பாரத்தைக் குறைப்பதற்காக நாம் ஏராளமான ரஸ்தாக்களை அமைக்க வேண்டும்.

ரஸ்தாக்களைக் குத்துமதிப்பாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள முக்கிய நகரங்களை இணைக்கும் பெரிய ரஸ்தாக்கள் ஒரு வகை. பல ராஜ்யங்கள் வழியே இவை செல்வதால் இவற்றைத் 'தேசிய ரஸ்தாக்கள்' என்று குறிப்பிடுகிறோம். இவற்றை மத்திய அரசாங்கம் அமைத்துப் பராமரிக்கிறது. தேசிய ரஸ்தாவிற்கு ஒரு சிறந்த உதாரணம் 'கிராண்டு டிரங்க் ரோடு.' தேசப் பிரிவினைக்கு முன்னால் இந்த ரஸ்தா கல்கத்தா முதல் பெஷாவர் வரை 1,800 மைல் நீளம் வியாபித்திருந்தது. இப்போது அமிர்தசரஸுடன் அது முடிந்து விடுகிறது. எனினும் இப்போது

கூட அதன் நீளம் 1,500 மைல். உலகிலேயே மிகப் பெரிய ரஸ்தாக்களில் ஒன்று அது.

'ராஜ்ய ரஸ்தாக்கள்' இரண்டாவது வகையைச் சேர்ந்தவை. ஒரு ராஜ்யத்தில் உள்ள முக்கியமான ஸ்தலங்களை இணைக்கும் பெரிய ரஸ்தாக்கள் இவை. இவற்றை அந்தந்த ராஜ்ய அரசாங்கம் பராமரிக்கிறது.

'கிராம ரஸ்தாக்கள்' மூன்றாவது வகையைச் சேர்ந்தவை. இவை பெரும்பாலும் மண் ரஸ்தாக்களே. அடை மழை பெய்தால் இவை கரைந்து விடும்; அடிக்கடி மராமத்துச் செய்ய வேண்டியிருக்கும். அதனால் கிராமாந்தரப் பகுதிகளில் உறுதியான 'மக்காடம்' ரஸ்தாக்களை அமைப்பதில் இப்போது கவனம் செலுத்தி வருகிறோம். ஜல்லிக் கற்களை அடுக்கடுக்காகப் போட்டு, ஒவ்வொரு அடுக்கையும் உருளையால் அழுத்தி இந்த ரஸ்தாக்கள் அமைக்கப் படுகின்றன. இயந்திர ரஸ்தா உருளைகள் இவ்வாறு வேலை செய்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் மக்காடம் என்பவர் முதன் முதலாக இம்மாதிரி ரஸ்தாக்களை அமைத்தார். அதனால்தான் இவை 'மக்காடம் ரஸ்தாக்கள்' என்று அழைக்கப்படுகின்றன. ஜல்லி ரஸ்தாக்கள் என்றும் அவற்றைக் குறிப்பிடலாம். சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்கள் பலவற்றில் கிராமவாசிகள் சொந்த முயற்சியால் இத்தகைய ரஸ்தாக்களை அமைத்து வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவியை அரசாங்கம் அளிக்கிறது.

நமது தேசிய ரஸ்தாக்களும் ராஜ்ய ரஸ்தாக்களும் முதலில் மக்காடம் முறைப்படியே அமைக்கப்படுகின்றன. பிறகு அவற்றின் மீது 'பிட்டுமன்' அல்லது தார் போடப்படுகிறது. இந்த மேல்பூச்சினால் ரஸ்தாக்கள் வழுவழுப்பும் உறுதியும் பெறுகின்றன.

இந்தியாவில் ரஸ்தாக்களை அதிகரிப்பது சம்பந்தமாக 1943-ல் நாகபுரியில் ஒரு மகாநாடு ஆராய்ந்தது. விவசாயக் கிராமம் எதுவும் பிரதான ரஸ்தாவிற்கு 5 மைல் தூரத்துக்கு அப்பால் இருக்கக்கூடாது என்றும், 20 வருஷ காலத்திற்குள் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் மகாநாடு குறிப்பிட்டது. அதாவது 1963-ஆம் வருஷத்திற்குள் இந்த இலட்சிய அளவை நாம் அடைய வேண்டும்.

மேற்சொன்ன இலட்சிய அளவில் கணிசமான பகுதியை நாம் ஏற்கெனவே நிறைவேற்றி விட்டோம். முதல் திட்ட காலத்தில் 10,000 மைலுக்கு மேல் உறுதியான ரஸ்தாக்களை யும்; அதைப்போல் இருமடங்கு மண் ரஸ்தாக்களையும் அமைத்தோம். இவ்வாறு மொத்தம் 30,000 மைல் நீள ரஸ் தாக்களைப் போட்டோம். சென்னைக்கும் டில்லிக்கும் இடையே உள்ள தூரத்தைப் போலச் சுமார் 26 மடங்கு இது.

ஆனால் இன்னமும் நம் நாட்டில் போதுமான ரஸ்தாக்கள் இல்லை. உதாரணமாக அமெரிக்காவில் (யு.எஸ்.ஏ.) நம் நாட்டை விட 12 மடங்கு அதிகமான ரஸ்தாக்கள் உள்ளன! நமது ரஸ்தாக்களை விட உறுதியாகவும் செம்மையாகவும் இருக்கின்றன அமெரிக்க ரஸ்தாக்கள். நம் நாட்டைப் போல அமெரிக்கா இருமடங்கு பெரியது என்பது உண்மைதான். எனினும் நம் தேசத்தின் பரப்புக்கு ஏற்ற விகிதத்தில் நம் மிடம் ரஸ்தாக்கள் இல்லை.

அதனால் இரண்டாவது திட்ட காலத்தில் உறுதியான ரஸ்தாக்களை அதிகமாக அமைக்கத் தீர்மானித்திருக்கிறோம். முதல் திட்ட காலத்தைவிட இருமடங்கு ரஸ்தாக்கள் போடப் படும். 1943-ஆம் ஆண்டில் நாம் நிர்ணயித்த குறிக்கோளை அடைய இது உதவும். சிறந்த ரஸ்தாக்களை அதிக அளவில் அமைத்தால் மோட்டார் போக்குவரத்து அதிகரிக்கும். அதன் மூலம் தொழில்களும் வியாபாரங்களும் பலனடையும்.

## கப்பல்கள்

பெரிய நாடாகிய இந்தியாவுக்கு வர்த்தகம் நடத்தச் சொந்தக் கப்பல்கள் வேண்டும். தற்போது நம்மிடம் அற்ப சொற்பமான கப்பல்களே உள்ளன. விசாகப்பட்டினத்தில் இருக்கும் தளம் ஒன்றில் மாத்திரமே கப்பல்கள் கட்டப்படு கின்றன.

நமது கப்பல் பலத்தை அதிகரிப்பதற்குச் சமீப காலமாக அரசாங்கம் பல ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. கரையோர வர்த்தகத்துக்கு இந்தியக் கப்பல்களையே உபயோகிக்க வேண் டும் என்று முதல் திட்ட காலத்தில் சர்க்கார் உத்தரவிட்டது. அந்நியக் கப்பல்களை உபயோகிப்பதைக் குறைப்பதுதான்

இதன் நோக்கம். கரையோர வர்த்தகத்துக்கும், தொலை தூர வர்த்தகத்துக்கும் வேண்டிய கப்பல்களை இந்தியக் கம்பெனிகள் வாங்குவதற்குச் சர்க்கார் கடன்கொடுத்து உதவியது. இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக முதல் திட்டகாலத்தில் நமது கப்பல் பலம் முன்னை விட 55 சத விகிதம் அதிகரித்தது.



கப்பல் பலத்தை இன்னமும் பெருக்கவேண்டும். இப்போது கரையோர வர்த்தகம் முழுவதும் இந்தியக் கப்பல்கள் மூலம் நடக்கின்றன அல்லவா? இனிமேல் வெளிநாட்டு வர்த்தகத்திலும் நம் கப்பல்களுக்கு அதிகப் பங்கு கிடைக்கவேண்டும். தவிர, கரையோரக் கப்பல் போக்குவரத்தை இன்னமும் அதிகரித்தால் நமது ரயில்வேக்கள், ரஸ்தாக்களின் வேலைப் பளு குறையும்.

விசாகப்பட்டினம் கப்பல் தளத்தை விஸ்தரிக்கவும், மற்றொரு கப்பல் தளத்தை அமைக்கவும் உத்தேசித்திருக்கிறோம். தொழில்கள் பற்றிய அத்தியாயத்தில் இதை ஏற்கெனவே குறிப்பிட்டோம். 1960-61-க்குள் 9,00,000 டன் ஆகக் கப்பல் பலத்தை அதிகரிக்கப் போகிறோம். அதாவது இப்போதைவிட அரை மடங்கு அதிகரிக்கும்.

9,00,000 டன் என்றால் உங்களுக்குப் பெரிதாகத் தோன்றலாம். ஆனால் இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டுக்கு இது அற்பமே. 'க்வீன் எலிஜபெத்' என்ற கப்பலைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? உலகிலேயே பெரிய கப்பல் அதுதான். அதன் எடை 83,000 டன். இந்த ஒரு கப்பலைப்போலப் பத்து மடங்குக் கப்பல்களைத்தான் 9 லட்சம் டன் குறிக்கிறது. இது போதாது. முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிட்டால் நமது

கப்பல் பலம் மிகச் சொற்பமே. உதாரணமாகப் பிரிட்டனிடம் நம்மை விட 34 மடங்கு அதிகமான கப்பல்கள் இருக்கின்றன!

நம் நாடு அபிவிருத்தி அடையும் போது மற்றத் தேசங்களுடன் நமது வர்த்தகமும் அதிகரிக்கிறது. இதற்கு ஏற்றபடி நமது கப்பல்களை அதிகரிப்பதோடு துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அதிகமான பண்டங்களை ஏற்றவும் இறக்கவும் துறைமுகங்களில் வசதி செய்ய வேண்டும். முதல் திட்ட காலத்தில் பம்பாய், சென்னை, கல்கத்தா என்ற பெரிய துறைமுகங்கள் சீரமைக்கப்பட்டன. மற்றும் காண்டலா என்ற பெரிய துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தது. 1947-க்கு முன் கராச்சி துறைமுகம் வழியாக நடந்து வந்த வர்த்தகத்தை இனிமேல் காண்டலா துறைமுகம் கவனித்துக் கொள்ளும். இரண்டாவது திட்ட காலத்தில் சிறியவை உட்பட நமது துறைமுகங்கள் பலவற்றை அபிவிருத்தி செய்வதற்காக அதிகமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## விமானங்கள்

ரயில்வே, ரஸ்தா, கப்பல் ஆகியவை தவிர இன்னொரு போக்குவரத்து சாதனமும் இருக்கிறது. அதுவே ஆகாய விமானம். மற்ற வாகனங்களைவிட விமானம்தான் அதி துரிதமாகச் செல்லக் கூடியது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் விமானப் பிரயாணம் வெகுவாக வளர்ந்திருக்கிறது பல வித வசதிகள் நிறைந்த பெரிய பெரிய விமானங்களை



நிர்மாணிப்பதில் வல்லரசுகள் போட்டி போடுகின்றன. நாமும் பெங்களூர் தொழிற்சாலையில் விமான உற்பத்தியைச் சிறிய அளவில் ஆரம்பித்திருக்கிறோம். ஆயினும் முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடும் அளவுக்கு நமது விமான உற்பத்தி இல்லை.

ஆகாய விமானங்களை அமைப்பதில் நாம் ஏன் அதிகப் பணத்தைச் செலவிடுவதில்லை? அதைவிட முக்கியமான வேறு பல காரியங்களை உடனடியாகக் கவனிக்க வேண்டி

யிருப்பதுதான் இதற்குக் காரணம். மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களே பற்றாக்குறையாக இருக்கும்போது விமானங்களுக்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுவது சாத்தியமல்ல. தவிர, விமானப் பிரயாணச் செலவு அதிகமாய் இருப்பதால் சாதாரண மக்கள் இவ்வசதியைப் பயன்படுத்த இயலாது.

விமானப் போக்குவரத்தை நாம் அலட்சியம் செய்வதாக இதற்கு அர்த்தம் இல்லை. ஏற்கெனவே இந்தியாவின் முக்கிய நகரங்கள் இடையே விமானப் போக்குவரத்து நடந்துவருகிறது. பதினைந்து அந்நிய நாடுகளுக்கு வேறு நமதுவிமானங்கள் போய்வருகின்றன. 1953-ல் விமானப் போக்குவரத்து அரசாங்க உடைமையாக்கப்பட்டது. அது முதல் இந்த வசதி நன்கு அபிவிருத்தி அடைந்துவருகிறது. முதல் திட்ட காலத்தில் நம் நாட்டில் 72 விமான நிலையங்கள் இருந்தன. இப்போது இவை 81-ஆக அதிகரித்துள்ளன. 1961-க்குள் மேலும் 3 விமான நிலையங்கள் அமைக்கப்படும். நவீன விமானங்களை அதிகமாக வாங்குவதற்கும் உத்தேசித்திருக்கிறோம்.

## தபால், தந்தி வசதி

தபால் வசதி ஒரு அரிய வரப்பிரசாதம். அது இல்லாவிட்டால் தூர தொலைவுகளிலுள்ள பந்துமித்திரர்களுடன் நாம் தொடர்பு கொள்ள முடியாது. தபால் இல்லாவிடில் வியாபாரமும் முடங்கிவிடும். ஏனெனில் பண்ட உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், பண்டம் வாங்குவோர் ஆகியவர்களிடையே தொடர்பு இல்லாமல் போய்விடும்.

நம் நாட்டில் பல கிராமங்களில் தபால் ஆபீஸ் இல்லை. கிராமங்களின் அபிவிருத்திக்கு இந்த வசதி மிகவும் அவசியம். ஆயினும் எல்லாக் கிராமங்களிலும் உடனடியாகத் தபால் ஆபீஸ்களை ஏற்படுத்த மிக ஏராளமான நிதி தேவைப்படும். அதனால்தான் படிப்படியாக இந்த வசதியை விஸ்தரித்து வருகிறோம். 1950-51 முதல் 1955-56 வரை உள்ள காலத்தில், சுமார் 19,000 புதிய தபால் ஆபீஸ்கள் அமைக்கப்பட்டன. 1960-61-க்குள் மேலும் 20,000 தபால் ஆபீஸ்கள் திறக்கப்படும்.



இந்தியா
ராஜ்யங்களும்
யூனியன் பிரதேசங்களும்
குறிப்பு
மண்டல எல்லை
ராஜ்ய எல்லை
ஆபகானிஸ்தான்
ஜம்மு–காஷ்மீர்
ஸ்ரீநகர்
சீனா
மேற்கு பாகிஸ்தான்
பஞ்சாப்
ஹிமாசல பிரதேசம்
சண்டிகார்
திபேத்
டில்லி
ராஜஸ்தான்
ஜெயபூர்
உத்தரப் பிரதேசம்
நேப்பாளம்
சிக்கிம்
பூட்டான்
அஸ்ஸாம்
பாட்னா
பீஹார்
கிழக்கு பாகிஸ்தான்
ஷில்லாங்
இம்பால்
மணிபுரி
திரிபுரா
பர்மா
மத்தியப் பிரதேசம்
போபால்
மேற்கு வங்காளம்
கல்கத்தா
ஒரிஸா
புவனேச்வர்
பம்பாய்
வங்காள விரிகுடா
ஹைதராபாத்
ஆந்திர பிரதேசம்
அரபிக் கடல்
கோவா
மைசூர்
பெங்களூர்
சென்னை
கோழிக்கோடு
கேரளா
லக்ஷத்தீவு மினிகாய்
அமினிதீவு
திருவனந்தபுரம்
இலங்கை
அந்தமான்
நிகோபார்
மண்டலங்கள்
வடக்கு 1
மத்திய 2
கிழக்கு 3
மேற்கு 4
தெற்கு 5

தகவல்களை அனுப்பத் தபாலைவிடத் துரிதமான தந்திச் சாதனம் வேறு இருக்கிறது. தந்தி ஆபீஸில் ஒருவர் சிறிய பித்தளைக் கருவி ஒன்றைக் கொட்டிக் கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். 'மோர்ஸ்' முறை என்ற சங்கேத முறைப்படி அவர் செய்திகளை அனுப்புகிறார். அவர் கருவியைத் தட்டும்போது எழுகின்ற நீண்ட ஒலிகளும் குறுகிய ஒலிகளும் வெவ்வேறு எழுத்துக்களைக் குறிக்கின்றன. சமீப காலமாகப் பெரிய நகரங்களில் மோர்ஸ் முறைக்குப் பதில் 'டெலிபிரிண்டர்' என்ற சாதனத்தின் மூலம் தந்திகள் அனுப்பப் படுகின்றன. டைப்ரைட்டரைப் போன்ற சாதனம் இது. ஒரு டெலிபிரண்டரில் டைப் அடித்தால் அந்த எழுத்துக்கள் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் இடத்தில் உள்ள மற்றொரு டெலிபிரிண்டர் சாதனத்தில் பதிவாகின்றன. இது ஆச்சரியமான விஷயம் அல்லவா?



தற்போது நம் நாட்டில் சுமார் 4,900 தந்தி ஆபீஸ்கள் இருக்கின்றன. ஆனால் கிராமங்களில் இந்த வசதி போதுமான அளவில் இல்லை. இக்குறையை நீக்க வேண்டும். நாம் புதிதாக ஏற்படுத்தவிருக்கும் சுமார் 1,400 தந்தி ஆபீஸ்களில் பெரும்பாலானவை கிராமங்களிலேயே அமைக்கப்படும். எந்தக் கிராமமும் தந்தி ஆபீஸிலிருந்து அதிகத் தொலைவில் இருக்கக் கூடாது. - அதுவே நமது குறிக்கோள்.

## ரேடியோ

சங்கீதம், பிரசங்கம், நாடகம் முதலியவற்றை ரேடியோவில் கேட்கிறோம். ரேடியோ நிகழ்ச்சிகள் நமக்கு ஆனந்தம் அளிப்பதோடு அறிவையும் புகட்டுகின்றன.

ரேடியோ நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பெறும் நிகழ்ச்சிகள் வானத்தில் பறந்து வந்து நம் வீட்டில் உள்ள ரேடியோ செட்டில் ஒலிக்கின்றன. சமீப காலம் வரை நம் நாட்டில் ஒரு

சில ரேடியோ நிலையங்களே இருந்து வந்தன. அவையும் நகர வாசிகளுக்குப் பிடித்தமான நிகழ்ச்சிகளையே ஒலிபரப்பி வந்தன. கிராமங்களில் வாழும் ஏராளமான மக்களிடம் ரேடியோ செட்டுக்களே இல்லை.



முதல் திட்ட காலத்தில் பல ரேடியோ நிலையங்கள் புதிதாக ஸ்தாபிக்கப் பட்டன. ஒவ்வொரு பாஷைப்பிரதேசத்துக்கும் ஒரு ரேடியோ நிலையமாவது இருப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு வசதியாகப் பல கிராமங்களுக்கு ரேடியோ செட்டுக்கள் வினியோகிக்கப்பட்டன.

ரேடியோ நிலையங்களில் அதிகச் சக்தி வாய்ந்த ஒலிபரப்பு இயந்திரங்களை நிறுவுவதற்குத் திட்டம் போட்டிருக்கிறோம். தவிர, கிராமவாசிகளுக்கு மேன்மேலும் அதிகமான ரேடியோ செட்டுக்கள் வழங்கப்படும்.

‘கேட்பதற்கு’ மாத்திரம் ரேடியோ செட்டு பயன்படுகிறது. ஆனால் ‘டெலிவிஷன்’ என்ற நூதன சாதனத்தின் மூலம் நிகழ்ச்சிகளைக் ‘கேட்கவும் பார்க்கவும்’ முடியும். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் டெலிவிஷன் பிரபலமாகியிருக்கிறது. நம் நாட்டிலும் டெலிவிஷனைச் சிறிய அளவில் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறோம்.



அத்தியாயம் 10

# திட்டத்தின் உயிர்

**நா**ட்டின் செல்வத்தை அதிகரிப்பதற்காக நாம் திட்டமிட்டுச் செய்துவரும் காரியங்களை இதுவரை கவனித்தோம். இக் காரியங்களின் விளைவாக நமது மாபெரும் தேசத்தின் வளமும் வலிமையும் பெருகும். ஆனால் இது மாத்திரம் போதாது. நாட்டின் செல்வம் பெருகுவதோடு மக்களின் வாழ்கை நிலையும் உயரவேண்டும். நல்வாழ்வே திட்டத்தின் குறிக்கோள். கல்வி, ஜாகை, சுகாதாரம் முதலிய வசதிகள் எல்லாம் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். பாடுபடும் பாட்டாளிகளின் நிலைமை உயர வேண்டும். பிற்பட்ட மக்கள் பிரிவினரைக் கைதூக்கி விடவேண்டும். இத்தகைய ஏற்பாடுகள் தாம் திட்டத்தின் உயிர். இவை இல்லாத திட்டம் உயிரற்ற உடலே.

## கல்வி

கல்வி வசதியை முதலில் கவனிக்கலாம். எழுதவும் படிக்கவும் தெரிந்து கொள்வதன் அவசியம் என்ன? பல கருத்துக்களும் அறிவும் சொற்கள் மூலம் வெளியிடப் படுகின்றன. இந்த அறிவு இல்லாவிடில் நாம் முன்னேற முடியாது. நவீன காலம் பிறப்பதற்கு முன் ஐரோப்பா 'மத்திய காலத்தில்' வாழ்ந்து வந்தது. 'இருள் காலம்' என்பது மத்திய காலத்தின் மறு பெயர். அந்தக் காலத்தில் அற்பசொற்பமான நபர்களுக்குத்தான் எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தது. அப்போது புத்தகங்கள் கையினாலேயே எழுதப் பட்டன. அதனால் சொற்பமான நூல்களே இருந்தன; அவற்றின் விலையும் அதிகம். இந்த நிலைமையினால் ஜனங்கள் நூற்றாண்டுகளாக அறியாமையில் ஆழ்ந்திருந்தனர். அறியாமை காரணமாக அவர்களிடம் அச்சம் குடிகொண்டிருந்தது. பின்னர் 'மறுமலர்ச்சி' இயக்கம் தோன்றியது. கல்வியிலும் கலைகளிலும் மக்களுக்கு ஆர்வம் பிறந்தது. அச்சுக் கலை கண்டுபிடிக்கப் பட்டது. மலிவான விலையில் ஏராளமான புத்தகங்கள் அச்சிடப் பட்டன. மக்க

ளிடையே அறிவு பரவியது. இவ்விதம் ஐரோப்பாவில் இருள் காலம் ஒழிந்து விட்டது.

இந்தியாவில் சமீபத்தில்தான் இருள் காலம் விலகிற்று. ஐரோப்பிய அறிவுச் சாதனங்களை இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் கொண்டு வந்தது வாஸ்தவமே. ஆயினும் இவற்றினல் நகரங்களே பலனடைந்தன. கிராம மக்களின் அறியாமையை நீக்குவதில் கவனம் செலுத்தப் படவில்லை. இப்போது நம் நாட்டு மக்களில் ஆறில் ஒரு பங்கினருக்குத்தான் எழுதப்படிக்கத் தெரியும். பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் அநேகமாக எல்லா மக்களுக்கும் எழுத்தறிவு உண்டு. ஒவ்வொரு குழந்தையும் கல்வி கற்பதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காகப் பள்ளிகளை மேன்மேலும் அதிகமாக ஏற்படுத்த வேண்டும்.



14 வயது வரை எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி போதிக்க 1960-க்குள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நமது அரசியல் சட்டம் யோசனை கூறியிருக்கிறது. குறித்த காலத்துக்குள் இந்தக் குறிக்கோளை முற்றிலும் நிறைவேற்ற முடியாமல் போகலாம். ஆயினும் 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளில் பாதிப் பேருக்காவது இரண்டாவது திட்ட காலத்தில் கல்வி வசதியை ஏற்படுத்தலாம் என்று நம்புகிறோம்.

பள்ளிகளின் தொகையை அதிகரித்தால் மாத்திரம் போதாது. பள்ளிகளில் போதிக்கப்படும் கல்வியின் தன்மையையும் சீர்திருத்த வேண்டும். நமது கல்வி முறையில் என்ன குறை என்று நீங்கள் கேட்கலாம். குழந்தையின் அறிவை இப்போதைய கல்வி வளர்க்கிறதே தவிர, பிற்கால வாழ்க்கைக்கு அவனைத் தயார் செய்வதில்லை. இதுவே கல்வி முறையில் உள்ள கோளாறு. சிறுவர்கள் பெரியவர்களான பிறகு வேலை செய்து பிழைக்க வேண்டியிருக்கிறது. பள்ளியில் படிக்கும்போதே அவர்களுக்கு ஏதாவது ஒரு கைத்தொழிலைப் போதிப்பது நல்லது. பிற்காலத்தில் அவர்கள் பிழைப்பதற்கு இது உதவியாக இருக்கும்.

இவ்வாறு கைத்தொழில் மூலம் கல்வி போதிப்பதற்கு 'ஆதாரக் கல்வி முறை' என்று பெயர். மஹாத்மா காந்தியின் யோசனை பேரில், அவருடைய அங்கீகாரம் பெற்று இந்த முறை வகுக்கப் பட்டது. இத்தகைய ஆதாரப் பள்ளிகளை அதிகமாக அமைப்பதற்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் வழி செய்கின்றன. 1950ல் நம் நாட்டில் 1750 ஆதாரப் பள்ளிகளே இருந்தன. இப்போது பத்தாயிரமாக அத்தொகை அதிகரித்துள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் இதைப்போல் நான்கு மடங்கு ஆதாரப்பள்ளிகள் ஏற்படுத்தப்படும்.

செகண்டரிப் பள்ளிகளிலும் கல்வி முறை மாற்றப்படுகிறது. அதாவது மாணவர்களுக்கு அனுஷ்டானப் பயிற்சிகளை அளிக்க ஏற்பாடு செய்யப் படுகிறது. இதன் விளைவாக செகண்டரிப் படிப்பு முடிந்ததும் மாணவர்கள் தாங்கள் பயிற்சி பெற்ற துறைகளில் வேலை தேடிக் கொள்ள முடியும், இதனால் சர்வகலாசாலைப் படிப்பை நாடும் மாணவர்களின் எண்ணிக்கை குறையும். இவ்வாறு குறைவது நல்லதே. ஏனெனில் இப்போது நமது கல்லூரிகளில் அளவுக்கு அதிகமான நெரிசல் காணப்படுகிறது. கல்லூரிகளில் கூட்டம் குறைந்தால் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு வசதியாக இருக்கும்.

இரண்டாவது திட்ட காலத்தில் தொழில்கள் பெருகும் என்று பார்த்தோம். தொழில்கள் அதிகரித்தால் இயந்திரங்களும் அதிகரிக்கும். இயந்திரங்களை அமைக்கவும் இயக்கவும்

பயிற்சிபெற்ற சிப்பந்திகள் அதிகமாகத்தேவைப்படுவர். இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் தொழில் நுணுக்கக் கல்வி ஸ்தாபனங்கள் அவசியம். முதல் திட்ட காலத்தில் பழைய தொழில் நுணுக்கப் பள்ளிகள் விஸ்தரிக்கப்பட்டன. புதியவை பல ஆரம்பிக்கப் பட்டன. இதன் விளைவாக முன்னைவிட



அரை மடங்கு அதிகமான மாணவர்களுக்குத் தொழில் நுணுக்கப் பட்டதாரிப் பயிற்சி, அல்லது 'டிப்ளமாப் பயிற்சி' அளிக்கப்பட்டது. இரண்டாவது திட்ட காலத்தில் இப்போதைவிட இரு மடங்கு மாணவர்கள் பட்டதாரிப் பயிற்சியும் மும்மடங்கு மாணவர்கள் டிப்ளமாப் பயிற்சியும் பெறுவர்.

குழந்தைப் பருவத்திலிருந்து முறையாகக் கல்வி பயில்வோருக்கு வசதி செய்வது பற்றி மேலே கவனித்தோம். இவர்கள் தவிர, வயதில் பெரியவர்கள் பலர் கல்வியறிவு இல்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு எழுத்தறிவையும் உலக நடப்புகளையும் போதிப்பது அவசியம். இதற்காகச் 'சமூகக் கல்வி நிலையங்கள்' பல முதலாவது திட்ட காலத்தில் ஆரம்பிக்கப்

பட்டன. சமூகக் கல்வி வசதிகளை மேலும் அதிகரிப்பதற்கு இரண்டாவது திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## ஆரோக்கியம்

பின்தங்கிய நாடுகளில் எல்லாம் மக்களின் ஆரோக்கியம் மோசமாக இருக்கிறது. இந்தியாவும் இதற்கு விலக்கு அல்ல. நம் நாட்டில் ஆண்டுதோறும் மலேரியா, க்ஷயரோகம் போன்ற வியாதிகள் லட்சோப லட்சம் ஜனங்களைக் கொல்கின்றன. நமக்குப் போதுமான ஆஸ்பத்திரிகள், டாக்டர்கள், நர்ஸுகள் இல்லை. கிராமங்களிலும் நகரங்களிலும் ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் ஜனங்கள் வாழ்கிறார்கள். குடிதண்ணீர் கூடக் கிருமிகள் இல்லாமல் சுத்தமாக இருப்பதில்லை.

1951-ஆம் வருஷ நிலைமைப்படி நம் நாட்டில் 8,600 ஆஸ்பத்திரிகள் இருந்தன. அதாவது 41,000 ஜனங்களுக்கு ஒரு ஆஸ்பத்திரி! இத்தனை பேரை ஒரு ஆஸ்பத்திரி பராமரிக்க முடியுமா? ஆஸ்பத்திரிகளின் தொகையைப் பெருவாரியாக அதிகரிக்க வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது. அவ்விதமே, முதலாவது திட்டகாலத்தில் 1,400 ஆஸ்பத்திரிகள் புதிதாக அமைக்கப்பட்டன. அடுத்த ஐந்தாண்டுகளில் மேலும் 2,600 ஆஸ்பத்திரிகள் திறக்கப்படும். அதிகமான டாக்டர்கள், நர்ஸுகள், மற்றச் சுகாதாரச் சிப்பந்திகள் ஆகியோருக்குப் பயிற்சியளிப்பதற்காக வைத்தியக் கல்வி வசதிகள் அதிகரிக்கப்படும்.



மலேரியா, பிலேரியா, க்ஷயரோகம் ஆகியவை நமது முப்பெரும் எதிரிகள் இவற்றுள் முதல் இரண்டு வியாதிகளும் கொசுக்கள் மூலம் பரவுகின்றன. போஷாக்கோ ஆரோக்கியமோ இல்லாமல் இருக்கும் ஜனங்களைக் கிருமிகள் மூலம் க்ஷயரோகம் பற்றிக்கொள்கிறது.

கொசுக்களை ஒழிப்பதுதான் மலேரியா, பிலேரியா வியாதிகளைத் தடுப்பதற்குச் சிறந்த வழி. முதல் திட்ட காலத்தில் மலேரியாவை ஒடுக்குவதற்காக 162 நிலையங்கள் ஆரம்பிக்கப் பட்டன. கொசுக்கள் பிறந்து வளரும் இடத்திலேயே அவற்றை நிலையச் சிப்பந்திகள் ஒழிக்கிறார்கள். டி. டி. ட்டி. என்ற கிருமி நாசினி மருந்தைத் தெளித்துக் கொசுக்களை இவ்வாறு கொல்லுகிறார்கள். வீடுகளிலும் சந்து பொந்துகளிலும் கூட அம்மருந்து தெளிக்கப்படுகிறது. இவ்வாறு மருந்து தெளிக்கப்பட்ட பிரதேசங்களில், மலேரியாவால் பீடிக்கப் படுபவர்களின் தொகையில் மூன்றில் ஒரு பங்கு ஓராண்டு காலத்தில் குறைந்து விட்டது. நம் நாட்டில் ஏற்கெனவே ஒரு டி. டி. ட்டி. தொழிற்சாலை இருப்பது உங்களுக்குத் தெரியும்.



இரண்டாவது திட்ட காலத்தில் இன்னொரு தொழிற்சாலை நிறுவப்படுகிறது. தவிர, மலேரியா கட்டுப்பாடு நிலையங்களின் தொகை 200-ஆக அதிகரிக்கப்படும். பிலேரியாவைக் கட்டுப் படுத்துவதற்காகத் தற்போது 13 நிலையங்கள் உள்ளன; புதிதாக 65 நிலையங்கள் இனி ஏற்படுத்தப்படும்.

மலேரியாவைப்போலச் சுலபமாக க்ஷயரோகத்தை ஒழிக்க முடியாது. ஆரோக்கியமும் போஷாக்கும் அற்றவர்களையே க்ஷயரோகம் பீடிப்பதால், மக்களின் வாழ்க்கைத் தரம் கணிசமாக உயர்ந்தால்தான் அவ்வியாதியை ஒடுக்க முடியும். எனி

னும் க்ஷயரோகம் பரவுவதைத் தடுப்பதற்கு முயன்று வருகிறோம். வைசூரி, காலரா போன்ற கொள்ளை நோய்கள் தோன்றினால் ஜனங்களுக்குச் சுகாதாரச் சிப்பந்திகள் அம்மை குத்துகிறார்கள், அல்லது ஊசி போடுகிறார்கள். கொள்ளை நோய்கள் தாக்காமல் பாதுகாப்பதே இதன் நோக்கம். இதே போல் க்ஷயரோகத்தைத் தடுக்க பி. ஸி. ஜி. என்ற மருந்து இருக்கிறது. க்ஷயரோகம் பீடிக்காமல் பாதுகாப்பதற்காக இந்த மருந்து ஊசி மூலம் குத்தப்படுகிறது. நம் நாட்டில் ஏற்கெனவே லட்சக் கணக்கான பேர்களுக்கு பி. ஸி. ஜி ஊசி குத்தப்பட்டிருக்கிறது. இரண்டாவது திட்ட காலத்தில் 25 வயதுக்குக் குறைந்த எல்லோரையும் பரிசோதனை செய்து, அவசியமானவர்கள் அனைவருக்கும் பி ஸி. ஜி. குத்துவதற்கு உத்தேசிக்கப்படுகிறது.

தற்போது சில பெரிய நகரங்களில் மாத்திரமே சுத்தமான குடிதண்ணீர் வசதி இருக்கிறது. கிருமிகளை நீக்கித் தண்ணீரைச் சுத்தம் செய்வதற்காக இந் நகரங்களில் இயந்திர சாதனங்கள் உள்ளன. கிராமங்களில் இத்தகைய வசதியில்லை. ஆனால் எல்லாக் கிராமங்களிலும் இயந்திர சாதனங்களை நிறுவுவது சாத்தியமல்ல. எனினும் குடிதண்ணீருக்கு எனத் தனியாகக் கிணறுகளைக் கிராமங்களில் தோண்டி அவற்றைச் சுகாதாரமாக வைத்துக் கொள்ளலாம். இதற்கு ஆங்காங்கே ஏற்பாடு செய்யப்படுகிறது. சாத்தியமான கிராமங்களில் காப்பு நீர் வினியோகத்துக்கும் வசதி செய்யப்படுகிறது.



அசுத்தமான சூழ்நிலையில் வசிப்போரை விடச் சுத்தமான சூழ்நிலையில் வசிப்பவர்கள் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். சூழ்நிலைச் சுகாதாரத்தின் அவசியத்தை இது காட்டுகிறது. அதனால்தான் நகரங்களிலும் கிராமங்களிலும் சரியான சாக்கடைகளைக் கட்டவும், அசுத்தங்களை அகற்றவும் சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறது. தங்கள் வீடுகளையும் தெருக்களை

யும் மக்கள் சுத்தமாக வைத்துக் கொண்டால் இவ்விஷயத்தில் உதவியாக இருக்கும்.

## வீடுகள்

உணவு, உடை உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை முன்பு படித்தோம். மனிதனின் மூன்ருவது முக்கிய தேவையாகிய உறைவிடத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று நீங்கள் கேட்கலாம். நம் நாட்டில் ஏராளமான வீடுகள் இருப்பது உண்மையே. ஆனல் அவற்றில் பெரும்பாலானவை ஆரோக்கியமான வீடுகள் அல்ல. ஜனத்தொகைக்கு ஏற்ற அளவில் ஜாகைகள் இல்லாததால் பல வீடுகளில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இப்போதைவிடச் சிறந்த வீடுகளை அதிக அளவில் கட்டுவது அவசியம்.

'வீட்டைக் கட்டிப் பார்' என்று ஒரு பழமொழி உண்டு. வீடு கட்ட நிறைய நிதி வேண்டும். மனைக்கட்டு வாங்குவது, கட்டடச் சாமான்களை வாங்குவது, கட்டுவோருக்கு ஊதியம் முதலியவற்றுக்காக ஏராளமான பணம் செலவாகும் இவ்வாறு செலவிட்டுச் சொந்த வீடு கட்டிக் கொள்ள நம்மில் பெரும்பாலோரால் இயலாது



அதனல் புதிய வீடுகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் உதவி அளித்து வருகிறது. ஆலைத் தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு வீடு கட்டிக் கொடுக்கும்

திட்டம் ஒன்று அமல் நடந்து வருகிறது. மத்திய சர்க்கார், ராஜ்ய அரசாங்கம், தொழில் அதிபர்கள் என்ற மூன்று தரப்பாரும் இதற்குப் பணம் கொடுக்கிறார்கள். இதன் விளைவாகத் தொழில் பிரதேசங்களில் புதிய குடியிருப்புகள் பல தோன்றியுள்ளன. அதிக வருமானம் இல்லாத மற்றப் பிரிவினர்களுக்கும் வீடு கட்டுவதற்குச் சர்க்கார் கடன் உதவியளிக்கிறது.

இரண்டாவது திட்ட காலத்தில் ஜாகை வசதியை அதிகரிப்பதற்காக முன்னைவிட மூன்று மடங்கு நிதி செலவிடப்படும். ஆலைத் தொழிலாளர், சுரங்கத் தொழிலாளர், குறைந்த வருமானக்காரர் ஆகியோருக்கு உதவி செய்வதோடு கிராமாந்தர வீடுகளைச் சீர்திருத்துவதிலும் இப்போதைவிட அதிகக் கவனம் செலுத்தப்படும். அகன்ற வீதிகள், சாக்கடை வசதி, இடைவெளி விட்டுக் கட்டப்பெற்ற சிறந்த வீடுகள், சமுதாய மன்றம், விளையாட்டு மைதானங்கள் முதலிய வசதிகள் பொருந்தியவையாக நமது கிராமங்கள் விளங்க வேண்டும்.

நகரங்களில் ஆரோக்கியமற்ற சேரிகளில் ஏராளமான ஜனங்கள் வசிக்கிறார்கள். இந்தச் சேரிகளுக்குப் பதில் ஆரோக்கியமான குடியிருப்புகளை நிர்மாணிக்கப் படிப்படியாக ஏற்பாடு செய்யப்படும்

## தொழிலாளர் நலன்

ஐரோப்பாவில் தொழில் புரட்சியின் போது நவீன இயந்திரங்களைக் கண்டு எல்லோரும் மெய்மறந்து போனார்கள். ஆனால் இயந்திரசாலைகளில் வேலை செய்துவந்த ஏழைத் தொழிலாளரின் அவதியை யாரும் கவனிக்கவில்லை. ஆலை முதலாளிக்குத் தம் லாபத்தில்தான் குறி. அவர் தொழிலாளருக்குக் குறைந்த கூலியே கொடுத்தார்; அவர்களிடம் அளவுக்கு அதிகமாக வேலை வாங்கினார். கொடிய வறுமையும் பிணிகளும் அவர்களை வாட்டின. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அற்ப ஆயுளில் இறந்தனர்.

பின்னர் படிப்படியாகப் பாட்டாளிகளின் நிலை உயர்ந்தது. அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முற்போக்கு நாடுகளில் எல்லாம் இப்போது சட்டங்கள் உள்ளன.

திருப்தி அற்ற ஒருவரை விடத் திருப்தி பெற்ற தொழிலாளரே நன்கு வேலை செய்கிருர் என்பது கண்கூடு. ஆகவே தொழிலாளருக்கு நியாய ஊதியம் கொடுத்து, அவர்களை நன்ருக நடத்திஞல் முதலாளிக்கும் நல்ல பலன் கிடைக்கிறது.



ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிட்டுள்ளபடி உற்பத்திகளைப் பெருக்குவதில் தொழிலாளருக்கு மிகுந்த பொறுப்பு உண்டு. அதனுல்தான் அவர்களது வாழ்க்கை நிலையையும் வேலைச் சூழ்நிலையையும் அரசாங்கம் கருத்துடன் அபிவிருத்தி செய்து வருகிறது. தொழிலாளரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நம் நாட்டில் பல சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன. அவர்கள் நியாய ஊதியம் பெறுவதற்கு ஒரு சட்டம் வழி செய்கிறது. நோய் அல்லது விபத்து நேர்ந்தாலும், வேலையை இழக்க நேரிட்டாலும் உதவுவதற்கு மற்ருெரு சட்டம் இருக்கிறது. தொழிற்சாலைகளில் வேலைச் சூழ்நிலையை அதிகாரிகள் மேற்பார்வை யிடுகிருர்கள். தொழிலாளருக்குப் புதிய வீடுகள்

கட்டப்படுவது பற்றி முன்பே பார்த்தோம். இவ்விதம் அவர்களுக்குப் பலவித வசதிகள் செய்யப்படுகின்றன. அவர்கள் நாட்டுக்குச் சிறப்பாகச் சேவை செய்வதற்கு இவை உதவுகின்றன.

## பின்தங்கியோர் முன்னேற்றம்

எல்லா மனிதர்களும் சமமானவர்கள்; எல்லோருக்கும் சம உரிமைகள் உண்டு என்று நமது அரசியல் சட்டம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் நம் நாட்டில் ஏராளமான பேருக்கு மற்றவர்களுடன் சம அந்தஸ்து இல்லை. வாழ்க்கையில் முன்னேற அவர்களுக்கு மற்றவர்களைப் போலச் சம வாய்ப்புகள் இல்லை. வறுமையிலும் அறியாமையிலும் அவர்கள் உழல்கிறார்கள்; தாழ்வான பணிகளைச் செய்து உயிர் வாழ்கிறார்கள். இவ்விதம் கஷ்டப்படும் மக்களில் பெரும்பாலோர் 'ஷெட்யூல் (தப்சீல்) வகுப்பினர்' என்று அழைக்கப் படுகின்றனர். இவர்கள் தேச ஜனத்தொகையில் சுமார் ஏழில் ஒரு பங்கினர் ஆவர். வேறு சில பின்தங்கிய வகுப்பினர்களும் உண்டு. உதாரணமாக மலைக்காட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் பூர்வ குடிகளைக் குறிப்பிடலாம். வெளி உலக முன்னேற்றத்தை அறியாமல் பல நூற்றாண்டுகளுக்கு முந்திய நிலைமையில் இவர்கள் வாழ்கிறார்கள்.

பின்தங்கிய வகுப்பினர்களுக்கு எவ்வாறு உதவுவது? முதலாவதாக, அவர்களுக்குக் கல்வி போதிப்பது ஒரு பெரிய உதவியாகும். ஷெட்யூல் வகுப்பினரும் பூர்வ குடிகளும் கல்வி கற்றால், மற்றவர்களைப் போல உத்தியோகங்களைப் பெற முடியும். அதனால் அவர்களுக்கு இலவசமாகக் கல்வி போதிக்க அரசாங்கம் உதவுகிறது. தொழில் நுணுக்கப் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஏதாவது தொழில் அல்லது வியாபாரம் செய்வதற்காக அவர்களுக்குக் கடன்கள் கொடுக்கப் படுகின்றன. அரசாங்க உத்தியோகங்கள் அவர்களுக்குத் தனியாக ஒதுக்கி வைக்கப் படுகின்றன.

முன்பெல்லாம் ஷெட்யூல் வகுப்பினர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். அவர்களைத் தொடுவது பாபம் என்று மற்றவர்கள் நினைத்தார்கள். மேல் வகுப்பினர்களின்

கிணறுகளில் அவர்கள் தண்ணீர் எடுக்கக்கூடாது என்றும் ஆலயங்களுக்கு அவர்கள் வரக் கூடாது என்றும் கட்டுப்பாடு கள் இருந்தன இந்தத் தீமைகளுக்குத் 'தீண்டாமை' என்று பெயர். ஆனால் இப்போது தீண்டாமை பாராட்ட முடியாது. ஏனெனில் அதை ஒழிக்கச் சட்டம் இயற்றப் பட்டுவிட்டது.



பூர்வ குடிகளுக்குச் சில விசேஷ பிரச்னைகள் உண்டு. அதாவது, அவர்கள் வசிக்கும் பிரதேசங்களில் சாதாரண வசதிகள் கூட இல்லை. குறிப்பாக ரஸ்தாக்கள், வீடுகள், கிணறுகள் முதலியவை அவர்களுக்குத் தேவை. போதிய உணவும் சுகாதார வசதிகளும் இல்லாததால் அவர்களை வியாதிகள் வருத்துகின்றன. டாக்டர்களும் மருந்துகளும் அவர்

களுக்கு அவசரமாக வேண்டும். இந்த வசதிகளை எல்லாம் பூர்வ குடிகளுக்குச் சர்க்கார் அளித்து வருகிறது. அவர்களு டைய பொருளாதார முன்னேற்றத்துக்காகக் கூட்டுறவு சங் கங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. குடிசைத் தொழில்களும் ஆரம்பிக்கப் படுகின்றன.

## சமூக நலம்

ஷெட்யூல் வகுப்பினர், பூர்வகுடிகள் தவிர வேறு பலருக் கும் சகாயம் தேவைப் படுகிறது. உதாரணமாக, ஏராளமான மாதர்களும் குழந்தைகளும் அனாதைகளாகத் தவிக்கிறார்கள். நொண்டிகள், குருடர்கள், ஊமைகள், மன வியாதியஸ்தர்கள் முதலியோருக்கும் உதவ வேண்டியிருக்கிறது. தவிர, சட் டத்தை மீறிக் குற்றம் இழைப்பவர்களை நல்வழிக்குத் திருப்ப வும் உதவி புரிய வேண்டும்.

இத்தகையவர்களுக்கு உதவி அளிப்பதைச் 'சமூக நல சேவை' என்று குறிப்பிடுகிறோம். சிறிய ஸ்தாபனங்கள் பல வும், தனிப்பட்ட தருமவான்களும் முன்பு இச் சேவையைச் செய்து வந்தார்கள். ஆனால் கஷ்டப்படுவோர் அனைவருக்கும் பணி புரிய அவர்களால் இயலவில்லை. போதிய பணம் இல் லாததால் ஸ்தாபனங்கள் சங்கடப்பட்டன. ஆனால் இப்போது நிலைமை மாறியிருக்கிறது.

சமூக நல வேலைகளை நாடெங்கும் இணைப்பாக நடத்துவ தற்காக 'மத்திய சமூக நல போர்டு' அமைக்கப் பட்டிருக்கிறது. போர்டுக்கு அரசாங்கம் பணம் கொடுக்கிறது. மத்திய போர் டுக்கு ராஜ்யங்களில் கிளைகள் உள்ளன. ஒவ்வொரு ராஜ்யத்தி லும் பணியாற்றும் சமூக நல ஸ்தாபனங்களுக்கு ராஜ்ய போர் டின் மூலம் மத்திய போர்டு நிதி உதவி அளிக்கிறது. இந்த உதவி காரணமாகச் சமூக சேவைகள் வளர்ந்து வருகின்றன.

இவ்வாறு தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு உதவுவ துடன், சமூக நல போர்டு சமூக சேவைத் திட்டங்களைத் தானே நேரடியாகவும் அமல் நடத்துகிறது. கிராமாந்தர மாதர்களும் குழந்தைகளும் இத் திட்டங்களால் பலன் பெறு கிறார்கள். இந்தச் சேவை வருங்காலத்தில் பெரிதும் விஸ்தரிக் கப்படும்.

அத்தியாயம் 11

# வேலை வசதி

**நா**ட்டின் செல்வத்தைப் பெருக்கி, அதை எல்லோருக்கும் நியாயமான முறையில் வினியோகிக்க வேண்டும். ஏழை, பணக்காரர் இடையே உள்ள ஏற்றத் தாழ்வைக் குறைக்க வேண்டும். இதுவே நம் திட்டங்களின் குறிக்கோள் என்று முன்பு குறிப்பிட்டோம்.

நம் மக்களில் பெரும்பாலோர் பரம ஏழைகள். அவர்களில் பலருக்கு வேலை இல்லை. வேலை இருந்தால்தானே பிழைக்க முடியும்?

ஏன் வேலை இல்லை? பொருளாதாரத் துறையில் நம் நாடு பின் தங்கி நின்றதுதான் இதற்கு முக்கிய காரணம். இதுவரை நம் ஜனங்களில் பெரும்பான்மையினர் விவசாயத்தையே பிழைப்பாகக் கொண்டிருந்தனர். ஏராளமான பேருக்கு வேலை அளிக்கக் கூடிய தொழிற்சாலைகள் நம் நாட்டில் அதிகமாகத் தோன்றவில்லை. விவசாயம் நிலம் எவ்வளவு பேரைத்தான் காப்பாற்ற முடியும்?

தவிர, நம் ஜனத்தொகை வேறு வேகமாக அதிகரித்து வந்திருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளில் அது 50 சத விகிதம் உயர்ந்துள்ளது! இதனால் மேன்மேலும் அதிகமான பேருக்கு வேலை தேவைப்பட்டது. ஆனால் ஜனத்தொகை பெருகிய மாதிரி வேலை வசதிகள் அதிகரிக்க வில்லை.

வேலையின்மைக்கு நமது கல்வி முறையும் ஒரு காரணமாகும். 'ஆபீஸ்' வேலைகளுக்கு மாத்திரம் நம் இளைஞர்களைத் தயார் செய்த முறை அது. தேக உழைப்பை அவர்கள் இழிவாகக் கருதினர். எல்லோருக்கும் 'ஆபீஸ்' வேலை கிடைப்பது சாத்தியமல்ல. தேக உழைப்பிலும் ஈடுபட்டால்தான் தேசத்தை முன்னேற்ற முடியும்.

வேலையின்மையை எவ்வாறு ஒழிப்பது? நாடு முன்னேறாததே இப் பிரச்னைக்கு முக்கிய காரணம் என்று மேலே கூறினோம். இப்போது ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நாடு அபிவிருத்தி யடைந்து வருகிறது. இதன் விளைவாக வேலை

வசதிகள் மேன்மேலும் அதிகரிக்கும். புதிதாக உருவாகிவரும் அணைகள், கட்டடங்கள், ரஸ்தாக்கள், பெரிய தொழிற்சாலைகள், சிறு தொழிற்சாலைகள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் ஏராளமான பேருக்கு வேலை கிடைக்கும். வளர்ந்துவரும் குடிசைத் தொழில்கள், விவசாயம், மீன் பிடிப்பு, வனங்கள், க்ஷேம நல ஏற்பாடுகள் முதலியவையும் பலருக்குப் பிழைப்பு அளிக்கும்.

படித்துவிட்டு வேலையில்லாதவர்கள் வேறு இருக்கிறார்கள். சமீபத்தில் இவர்களில் பலர் கிராமங்களில் உபாத்தியாயர்களாக நியமிக்கப்பட்டனர். சிறு தொழில்கள், கூட்டுறவு லாரிப் போக்குவரத்துச் சங்கங்கள் முதலியவற்றில் வேறு பலர் ஈடுபடுத்தப் படுகின்றனர். அதோடு, பிழைப்புக்கு உதவும் விதத்தில் கல்வி முறையையும் சீர்திருத்தி வருகிறோம்

வேலை அற்றோருக்கு வேலை அளிப்பதற்காக வேறு சில ஏற்பாடுகளும் செய்யப் படுகின்றன. எனினும் இரண்டாவது திட்ட காலத்திற்குள் எல்லோருக்கும் வேலை கிடைத்துவிட முடியாது. படிப்படியாக எல்லோருக்கும் வேலை கிடைக்க வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். சீக்கிரமே அக் குறிக்கோளை அடைவதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும்.

## அத்தியாயம் 12

# மாபெரும் அறைகூவல்

நமது தேசியத் திட்டங்களை இப்போது நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள். விவசாயம், தொழில்கள், ரயில்வே முதலியவற்றை அபிவிருத்தி செய்யவும், நம் வாழ்க்கை வசதிகளை அதிகரிக்கவும் திட்டங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதைத் தெரிந்து கொண்டீர்கள்.

திட்டங்களின்படி இந்த அற்புத வேலைகளைச் செய்வது யார்? சர்க்காரா? சர்க்கார் பெரிதும் பாடுபடுகிறது என்பது உண்மையே. திட்ட வேலைகள் எல்லாம் சரிவர நடக்குமாறு அரசாங்கம் கண்காணிக்கிறது. ஆயினும் சர்க்கார் மாத்திரமே எல்லாக் காரியங்களையும் நிறைவேற்ற முடியாது. சர்க்காருக்கு ஜனங்களின் உதவி தேவை. இவ்வாறு மக்கள் உதவுவதற்கு

நம் திட்டங்களில் பல வாய்ப்புகள் உள்ளன. மக்களும் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வதற்காகச் சந்தோஷமாகக் கூடி உழைக்கிறார்கள்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை இதற்குச் சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம். பணமும் ஆலோசனையும் அளித்து சர்க்கார் உதவுகிறது; ஜனங்களே தங்கள் தலைவர்களின் கீழ் வேலை செய்து சமுதாய அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுகிறார்கள். தவிர, கூட்டுறவு சங்கங்களில் மக்கள் சேர்ந்து ஒத்துழைக்கிறார்கள். குடியானவர்கள், கைத்தொழிலாளர் முதலியோர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் எவ்வாறு பலன் அடைகிறார்கள் என்பதை முன்பே பார்த்தோம்.

சமுதாய அபிவிருத்தித் திட்டம் பரவாத பிரதேசங்களில் கூட ஜனங்கள் பணமும் உழைப்பும் தந்து 'ஸ்தல அபிவிருத்தி வேலைகளை' நிறைவேற்றுகிறார்கள். ரஸ்தாக்கள், கிணறுகள், பொதுக்கட்டடங்கள் முதலியவை இவ்வாறு அமைக்கப் படுகின்றன. இவ்வேலைகளுக்கு அரசாங்கமும் உதவி அளிக்கிறது.

நமது மாதர்களும் நன்கு பணிபுரிகிறார்கள். குறிப்பாக சமூக நல சேவை, சுகாதாரம் போன்ற துறைகளில் அவர்கள் பெரிதும் உதவுகின்றனர். மாதர் சேமிப்பு இயக்கத்தின் மூலம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி திரட்டப்படுகிறது. இவ்வாறு கிடைக்கும் ஒவ்வொரு அணுவும் நாட்டுக்கு நன்மைதருகிறது.

மாணவர்களாகிய நீங்கள் திட்டத்துக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா? ஆம், உங்களுக்கும் இதில் பங்கு உண்டு. உதாரணமாகப் பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் விடுமுறையின் போது 'இளைஞர் முகாம்'களில் சேர்ந்து சேவை செய்கிறார்கள். இதன் மூலம் கட்டுப்பாடாக வாழ்வதற்கு அவர்கள் தெரிந்து கொள்வதுடன், கிராம மக்கள் நல்வாழ்வு பெறுவதற்கும் உதவுகிறார்கள்.

இளைஞர்கள் நல்ல பிரஜைகளாகி நாட்டுக்குப் பணியாற்றப் பல ஸ்தாபனங்கள் உதவுகின்றன. பாரத சேவக் சமாஜம் இவற்றுள் ஒன்று. தேசிய மாணவர் படை, மாணவர் துணைப்படை, பாரத சாரணர்-சாரணியர் சங்கம் முதலிய வேறு பல ஸ்தாபனங்களும் உள்ளன. இவை உங்களுக்குத் தெரிந்திருக்கும். இவற்றில் நீங்கள் சேர்ந்திருக்கவும் கூடும்.



பின்வரும் கதையை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்:– முன்ஞெரு காலத்தில் ஒரு அரசர் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் தங்களிடையே பூசலிட்டு வந்தார்கள். அரசர் இறக்கும் தருவாயில் தம் பிள்ளைகளை அருகில் அழைத்

தார். குச்சிகளின் கட்டு ஒன்றை இளைய மகனிடம் கொடுத்து அதை ஒடிக்கச் சொன்னார். அவனால் ஒடிக்க முடியவில்லை. மற்ற இருவராலும்கூட முடியவில்லை. பிறகு கட்டிலிருந்து ஒவ்வொரு குச்சியாக எடுத்து ஒடிக்கும்படி கடைசிப் பிள்ளையிடம் அரசர் கூறினார். குச்சிகளை ஒவ்வொன்றாக அவன் சுலபமாக ஒடித்து விட்டான். ஒற்றுமையாக இருந்தால்தான் பலம் உண்டு என்ற நீதியைப் பிள்ளைகள் இதிலிருந்து தெரிந்து கொண்டனர்.

ஒற்றுமையின் உயர்வை இந்தியர்களாகிய நாம் நன்கு அறிவோம். மக்கள் ஒற்றுமையுடன் ஒத்துழைத்தால்தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற முடியும். நாம் மேன் மேலும் கூடி உழைத்தால் நாடு துரிதமாக முன்னேறும்.

திட்டத்தின் வெற்றிக்காகப் பாடுபடுவதில் ஒவ்வொரு வருக்கும் பங்கு உண்டு. நம்மில் ஒவ்வொருவருக்கும் திட்டத் தின் பலனிலும் பங்கு கிடைக்கும்.

இதை இன்னொரு கதையின் வாயிலாக விளக்கலாம்: ஒரு தொழிற்சாலையில் ஒரு பிரம்மாண்ட இயந்திரம் இருந்தது. சிக்கலான பலவித உறுப்புக்களைக் கொண்ட இயந்திரம் அது. எல்லா உறுப்புக்களுக்கும் இடையே தொடர்பு உண்டு. இயந்தி ரத்தின் மேல்பாகத்தில் ஒரு பெரிய சக்கரம் இருந்தது. படிப்படி யாக அதைவிடச் சிறியவையான சக்கரங்கள் கீழே இருந்தன. எல்லாவற்றுக்கும் கீழே மிகச் சிறிய சக்கரம் ஒன்று பொருத் தப் பட்டிருந்தது. மின்சார விசையைத் தட்டி விட்டால் எல்லாச் சக்கரங்களும் சுற்றும்; இயந்திரம் வேலை செய்யத் தொடங்கும். இந்த இயந்திரத்தைப் பார்ப்பதற்கு எத் தனையோ பேர் வந்தார்கள். அவர்கள் அனைவரும் பெரிய சக்கரங்களை மாத்திரம் பார்த்துப் பார்த்து வியந்தார்கள். சின்னஞ்சிறு சக்கரத்தை எவரும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. இதனால் சிறு சக்கரத்துக்கு வருத்தம் உண்டாகிவிட்டது. சிறிய உறுப்பாகிய தன்னால் இயந்திரத்துக்குப் பிரயோசனம் இல்லை என்று அது நினைத்தது. அதனால் ஒரு நாள் அது சுற்றாமல் நின்றுவிட்டது. இதன் விளைவாக, சிறிய சக்கரத் துடன் தொடர்புள்ள அடுத்த சக்கரமும் சுற்ற முடியாமல் நிற்க வேண்டியதாயிற்று; இவ்வாறே எல்லாச் சக்கரங்களும் நின்றுவிட்டன. இயந்திரம் வேலை செய்ய முடியவில்லை.

இதிலிருந்து என்ன அறிகிறோம்? இயந்திரம் இயங்குவதற்கு அதன் சின்னஞ்சிறு உறுப்புக்கூட அவசியம் என்பதை அறிகிறோம். இதேபோல் நமது ஐந்தாண்டுத் திட்டத்தை ஒரு



பெரிய இயந்திரம் என்று வைத்துக் கொள்வோம். நாம் எல்லோரும் அந்த இயந்திரத்தில் உள்ள சக்கரங்கள் திட்டம் நிறைவேற நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நம்மில் மிகச் சிறியவர் கூடத் திட்டத்துக்கு அத்தியாவசியமானவர்.

திட்டம் வெற்றி பெறுதவற்கு நாம் அனைவரும் தோளோடு தோள் சேர்த்துப் பாடுபட வேண்டும். நமது சக்தி முழுதையும் இப்பணியில் ஈடுபடுத்த வேண்டும். கோடானு கோடி மக்கள் வாழும் இந்தியாவை வளநாடு ஆக்குவது மகத்தான காரியமாகும். மனிதகுல வரலாறே கண்டறியாத காட்சி இது. நமக்கு ஒரு பெரிய அறைகூவல் இது. நாம் வெற்றி பெற்றே தீரவேண்டும்.

THE PUBLICATIONS DIVISION,
Ministry of Information & Broadcasting
Old Secretariat, Delhi - 8.

Shanti Press, Madras - 1